விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 | மார்கழி 10 | ராபி ஆகி 12 | இதழ் 318
யாழ்ப்பாணம் | புதன்கிழமை | 25-12-1985

யாழ்ப்பாணம்

## ஆயுதபாணியாக வந்தவர்கள் அட்டகாசம்!

### ஒருவர் பலி; சிலர் காயம்

(ஏ. வி. மாணிக்கம்)

காரைநகர் கடற்படை முகாமிற்கு அண்மையிலுள்ள தோப்புக்காடு-விளான் பகுதிக்கு ஆயுதபாணியாக சிவில் உடையில் வந்தவர்கள் அங்குள்ள மக்கள் மீது நடத்திய தாக்குதலில் சீவல் தொழிலாளி ஒருவர் கொல்லப்பட்டார், இரு வர்த்தகர்களின் கடைகளைச் சேதப்படுத்தியதுடன் அவர்கள் தாக்குதலுக்குள்ளானுர்கள், சில பெண்களும் துன்புறுத்தப்பட்டனராம்.

நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இத்தாக்குதல் சம்பவம் குறித்து யாழ். அரச அதிபருக்குப் புகார் செய்யப்பட்டுள்ளது.

தோப்புக்காடு-மடத்துவெளியைச் சேர்ந்த கந்தையன் சின்னமணி (37 வயது) என்பவரே பலியானவராவார்

வர்த்தகர்களான இராசையா இரத்தினராசா, சுந்தரலிங்கம்

(12-ம் பக்கம் பார்க்க)

## "தினம்தினம்வரும் கொலைச்செய்திகள்: இந்தியா பெரும் கவலை!"

# இந்தியவம்சாவளிமக்களை ஏற்க பிரதமர் ராஜீவ் புதிய நிபந்தனை!



(புதுடில்லி)

**"இந்தியா வந்திருக்கும் இலங்கை அகதிகள்; பாதுகாப்பாகவும், கண்ணியமாகவும் தங்கள் தாயகம் திரும்பவழி ஏற்படும்வரை இந்தியப் பிரஜாவுரிமைத் தகுதிபெற்ற இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளி மக்களை இந்தியா ஏற்றுக்கொள்ளாது." என்று இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி தெரிவித்துள்ளார்.**

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி நேற்று பி. ரி. ஐ. செய்தியாளருக்கு அளித்த பேட்டியிலேயே மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

'இலங்கையில் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுகிறார்கள் என்ற செய்திகள் இந்தியா முழுவதற்கும் கவலை அளிக்கின்றது' என்று வருத்தம் தெரிவித்த பிரதமர் ராஜீவ் காந்தி,

"இந்தியப் பிரஜா உரிமைக்கு தகுதி பெற்ற இந்திய வம்சாவளி மக்களை ஏற்றுக் கொள்ளுமாறு இலங்கை அரசு இந்தியாவைக் கேட்டுள்ளது.

கொள்கை அளவிலும் இந்தியாவின் உறுதி மொழிக்கேற்பவும் இக்கோரிக்கையை ஏற்க இந்தியா தயாராக இருந்தாலும், இலங்கையின் நிலவரம் முதலில் வழமைக்குத் திரும்பி, ஏற்கனவே இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகள் பாதுகாப்புடனும், கண்ணியத்துடனும் தங்கள் தாயகம் திரும்பும் சூழ்நிலை ஏற்படும்வரை இந்திய மக்களை இந்தியாவுக்கு திருப்பி அழைத்துக் கொள்ள முடியாது" என்று வலியுறுத்திக் கூறினுர்.

கடந்த சிலவாரங்களாக இலங்கைப் பாதுகாப்புப் படையினர் தமிழ்மக்களை அழித்து வருவதாகக் கூறப்படும் செய்திபற்றி செய்தியா

[12-ம் பக்கம் பார்க்க]

## பலாலி விமான நிலையப் பகுதியில் விவசாயிகளை ஒருவாரத்தில் வெளியேறும்படி அச்சுறுத்தல்!

[யாழ்ப்பாணம்]

பலாலி விமான நிலையத்தை அண்டிய பகுதியில்வாழும் விவசாயிகளை ஒரு வார காலத்திற்குள் அப்பகுதியிலிருந்து வெளியேறும்படி விமானப்படை அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

இப்பகுதியில் இராணுவ முகாம்விஸ்தரிப்புக்கென நிலம் சுவீகரிப்பதற்கான வேலைகள் நடைபெற்றுவரும் அதேசமயம் உயர்ந்துவளரும் பயிர்களை மாத்திரம் செய்கைபண்ண வேண்டாமென கடந்த வாரம் இராணுவ அதிகாரிகள் விவசாயிகளைக் கேட்டிருந்தனர்.

இப்போது ஒரு வார காலத்துக்குள் இவர்களை வெளியேறும்படி பணித்திருப்பதால் அவர்கள் மிகுந்த கலக்கத்துக்கும் துன்பத்துக்கும் ஆளாகியுள்ளனர். இந்த அவலநிலை குறித்து அப் குதி விவசாயிகள் யாழ். அரச அதிபருக்கு பகுதிப் பிரஜைகள் குழு மூலம் கோரிக்கையொன்றை விடுத்துள்ளனர்.

## 84,000 பேரையும் விமானம்மூலம் அனுப்ப முடிவு!

(கொழும்பு)

எண்பத்து நாலாயிரம் இந்திய வம்சாவழி மக்களையும் விமான மூலமாவது இந்தியா அனுப்பிவைப்பதென்று இலங்கை அரசு தீர்மானித்துள்ளது.

மேற்படித் தீர்மானம்ஜனுதிபதி ஜெ. ஆர். ஜெயவர்த்தனுவும், வெளிநாட்டமைச்சு குடிவரவு அதிகாரிகளும் கலந்துகொண்ட உயர்மட்ட மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தலைமன்னுர் - இராமேஸ்வரம் கப்டல் சேவை இடைநிறுத்தி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து தாயகம் திரும்ப முடியாமல் இருக்கும் எண்பத்துநாலாயிரம் இந்தியவம்சாவழியினரையும் தாயகம்

(9-ம் பக்கம் பார்க்க)

### எச்சரிக்கை

[கொழும்பு]

ஒஸ்ராமில்க், கொம்பிளான் ஆகிய பாலுணவில் உடல் நலத்துக்கு தீங்கு விளைவிக்கும் ஏதுக்கள் சேர்ந்திருக்கலாம் என்று இந்த உணவுப்பொருட்களின் உற்பத்தி நிறுவனமான இங்கிலாந்தைச் சேர்ந்த 'பார்லிக்ஸ்' நிறுவனம்அதன் இலங்கை முகவர் நிலையத்துக்கு அறிவித்துள்ளது.

## கூட்டணி யோசனையை:இலங்கை ஏற்க இந்தியாவற்புறுத்தவேண்டும்

### ராஜீவுக்கு கோரிக்கை

[கொழும்பு]

"வெறுக்கத்தக்க அரசபயங்கரவாதம் தொடருமானுல். இந்திய மக்களும் இந்திய அரசாங்கமும் கைகளைக் கட்டிக்கொண்டு பார்த்துக்கொண்டிருக்காது என்பதை இலங்கை அரசாங்கத்திடம் இந்திய அரசு தெளிவாக வற்புறுத்திக் கூறவேண்டும்" என்று சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் திரு. ஆர். காந்தியும் டாக்டர் இரா. ஜனுர்த்தனனும் கூட்டாக இந்திய அரசைக் கோரியுள்ளனர்.

(12-ம் பக்கம் பார்க்க)



'ஈழநாடு' நத்தார் வாழ்த்து

# பாலசிங்கம் கொலை முயற்சி: "ஒருயூதப்பயங்கரமாகும்!"

## கூட்டணி, உமா, ஜனுர்த்தனன் கண்டனம்

[சென்னை]

"தமிழரின் விடுதலைக்காகப் போராடும் சக்திகளின் ஒற்றுமைக்கு எதிராக இருப்பவர்களே, கலாநிதி எஸ். ஏ. பாலசிங்கத்தின் மீதான குண்டுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். தமிழரின் ஒற்றுமைக்கு உரமிட்டு அயராது உழைத்த ஒருவரின் உயிரைப் பறிக்க எடுத்த முயற்சி இது!" என்று தமிழர் விடுதலைக் கூட்டணி நேற்று விடுத்துள்ள அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளது.

சென்னையிலிருந்து தமிழர் விடுதலைக் கூட்டணியால் விடுக்கப்பட்டுள்ளஇக்கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"தமிழர் விடுதலை முன்னணியினர்மீது மேற்கொள்ளப்பட்ட இக்குண்டுத் தாக்குதல் 'ஒரு யூதப் பயங்கரவாத'மாகும், விடுதலை இலட்சிய வீரர்கள் தமது வேறுபாடுகளை மறந்து பொது எதிரிக்கு எதிரான ஒற்றுமை முன்னணியை உருவாக்கவேண்டிய அவசியத்தை இச்சம்பவம் வலியுறுத்துகின்றது!"

### 'உமா' கண்டனம்

தமிழீழ மக்கள் விடுதலைக் கழக செயலதிபர் திரு. உமா மகேஸ்வரன் இச்சம்பவம் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில்; "கலாநிதி பால

(9-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

ஒலிப்பதிவு செய்த கசெற் (1) மார்கழி மாதத்தின் பெருமையும், ஸ்ரீதுர்க்காதேவியின் மகிமையும்: உபந்நியாசம் - வாரியார் (2) கிறிஸ்தவப் பாடல்கள் - தமிழ், (3) கிறிஸ்மஸ் பாடல்கள் - ஆங்கிலம். பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். 2606

செம்மணி வீதி, நாயன்மார் கட்டு ஆஸ்பத்திரிக்கருகாமையில், பாதுகாப்பான சூழலில், மின்சார வசதியுள்ள புதிதாக கட்டிய வீடு 3½ பரப்பு காணியுடன் விற்பனைக்குண்டு. சட்டத்தரணி, மகேசன் வைமன் வீதி, நல்லூர். 2604

சிவப்பிரகாசம்வீதி, பிற்பக்கமாக துரைராஜா வீதியில் 1½ பரப்புகாணி விற்பனைக்குண்டு. 39, சிவப்பிரகாசம் . வீதியில் தொடர்பு கொள்ளவும். 2591

மினித்தியேட்டருக்குரிய புதிய யப்பான் புளூ லென்ஸ் 42'' விற்பனைக்குண்டு. விபரங்கட்கு சித்திரகலா ஸ்ரூடியோ கே.கே.எஸ்.ரோட், சுன்னாகம். 2594

6-12-85 வியாழக்கிழமை பருத்தித்துறை, வடமராட்சி கால்நடைவளர்ப்போர் சங்கம் நடாத்தும் கண்காட்சியில் அமைந்துள்ள மில்க்வைற் காட்சிச்சாலையில் ரூபா 15 க்கு மேல் மில்க்வைற் தயாரிப்புகளை வாங்கும் அன்பர்களுக்கு வீட்டுத்தோட்ட விதைகள், பொலித்தீன் பாக், அறிவு நூல்கள், நேர சூசி, ஒரு முகக் கலண்டர்தாள் அன்பளிப்பாக வழங்கப்படும். மில்க்வைற் மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் அவற்றைக்கொடுத்து பரிசில்களைப் பெற்றுக்கொள்ளலாம். மில்க்வைற், யாழ்ப்பாணம். 2601

சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்குச் சமீபமாக 1½பரப்புரெட்டுக்கரைக் காணி, சதுரம் உடனடியாக விற்பனைக்குண்டு. விளம்பர இல. 2615 மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 2615

சாவகச்சேரியில் இருந்து (2) கட்டையில் இருக்கும் தனங்களப்பில் 10 ஏக்கர் தென்னந்தோட்டம் வீடு கிணற்றுடன் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: S. கந்தசாமி சட்டத்தரணி. கோட்டுக்கு முன்பாக சாவகச்சேரி 2586

## சேவை

தரமான நவீன வீட்டு தளபாடங்களை மலிவாகவும் குறித்த நேரத்திற்கு ஓடர் செய்து பெற்றுக்கொள்வதற்கும்: United Engineers Carpentry Work Shop, சாயி மர அரிவு ஆலை, 91, ராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம். 2583

சாயி மர அரிவு ஆலை மீண்டும் புதுப்பொலிவுடன்இயங்குகின்றது. சகல மரத்தேவைகளுக்கும் Plan வரைதல், Esti-mate, கட்டட நிர்மாணம் சகல கட்ட தச்சு வேலைகளுக்கும்: United Engineer சாயி மர அரிவு ஆலை, 91, ராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம். 2584

## தேவை

கொழும்பில் தலைமையிடமுள்ள யாழ்ப்பாணம் கிளையில் கடமையாற்ற ஓர் பெண் லிகிதர் தேவை. இவர் இருப்பு எடுத்தல், கணக்கெழுதக்கூடியவராகவும் ஓய்வு நேரத்தில் பாக்கிங்செய்யக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும். யாழ்ப்பாண நகர எல்லையில் வசிப்பவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படும். ஆங்கில அறிவு அவசியம். விளம்பர இல. 2603 C/o. ஈழநாடு, யாழ்ப்பாணம் 2603

யாழ். மாநகரசபை எல்லைக்குள் மின்சாரம், நீர் முதலிய வசதிகளோடு ஐந்து அறைகளுக்குக் குறையாத விசாலமான வீடு வாடகைக்குத் தேவை. விளம்பர இல. 2533 C/o. ஈழநாடு, யாழ்ப்பாணம். 2533

யாழ்ப்பாணம் நவீனசந்தையில் அமைந்திருக்கும் தரன் ஸ்ரூடியோவில் கடமையாற்றுவதற்கு பெண் காசாளரும்; பெண் பயிற்சியாளர்களுக்கும் வெற்றிடமுண்டு. யாழ் மாநகரசபை எல்லைக்குள் இருப்பவர் விரும்பத்தக்கது. தரன் ஸ்ரூடியோ யாழ்ப்பாணம். போன்: 23858 2557

''பாடல்கள் ஒலிப்பதிவு செய்வதற்கு மகளிர் தேவை. அனுபவமுள்ளவர்கள் 1-1-86 க்கு முன் விண்ணப்பம் செய்யவும், உரிமையாளர், சேக்கிள் சென்ரர், பிரதான வீதி, சங்கானை.'' 2607

## தவறிவிட்டது

இல. 650053427 V தர்மலிங்கம் ரவிவர்ணன், பொற்தொழிலாளர் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி என்பவருடைய அடையாள அட்டை 19-12-85 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேல் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 2592

எனது 522973319 V இலக்க நல்லதம்பி, கனகலிங்கம் மல்லாவி துணுக்காய் என்ற அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தோர், க. விசாகராஜா, அருளையா பிளேஸ், கோப்பாய் தெற்கு, கோப்பாய் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். 2590

## வைத்தியம்

மூலவியாதிகள், வாதவியாதிகள், பீனிசம், எக்ஸிமா போன்ற சருமவியாதிகள், தொய்வு, கண்ரோகங்கள், நரம்புத்தளர்ச்சி, மாதவிடாய் காலஉபத்திரவங்கள், குழந்தைப்பேறின்மை, குழந்தைகள் சம்பந்தமானவியாதிகளுக்கும், நீரிழிவு ரோகத்திற்கும், சித்த ஆயுர்வேத வைத்திய முறைப்படி சிகிச்சை பெறலாம். டாக்டர் மங்களாம்பிகை D. A. M. மங்களபதி வைத்தியசாலை, [பண்டாரக்குளம் பிள்ளையார் கோவிலடி] 41/5, அரசவீதி, நல்லூர். 2530

## வாடகைக்கு

ஒரு அறையும், குசினியும் மின்சாரவசதியுடன் வாடகைக்குண்டு. தொடர்பு: இல. 12A, 5-ம் கு. ரோட், யாழ்ப்பாணம். 2605

## கல்வி

VISPA ENGINEERING AID HALL (ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கியின் அருகேயுள்ள ஒழுங்கையினுள்) 2, 3 ,6 மாத வகுப்புகள். வெளிநாடுகளில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். Wiring, Welding ரேடியோ, ரி. வி., மொட்டார் மெக்கானிசம். ஆரம்பம்: 28-12-85 நத்தாரை முன்னிட்டு முதலில் சேருபவருக்கு கட்டணத்தில் சலுகை வழங்கப்படும். 2596

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

மரணசாதனம் முடியாமல் அடியற்றுக் காலம் சென்ற வளலாய் கிழக்கு, அச்சுவேலியைச் சேர்ந்த பண்டாரம் துரையின் சொத்துக்கள்விடயமாக.

இறந்தவர்.

மரணசாதன நியாயாதிக்கம் } இல: T/246

பண்டாரம் துரை கைம்பெண் அம்மாப்பிள்ளை வளலாய் கிழக்கு, அச்சுவேலி.

மனுதார்.

எதிராக

1. சண்முகம் கிருஷ்ண பிள்ளை
2. பெண் சரஸ்வதி
3. ஆண்டி சின்னத்துரை
4. பெண் சின்னம்மா
5. முருகர் சின்னக்கண்டு
6. பெண் மாணிக்கம்
7. பொன்னையா அப்புத்துரை
8. பெண் சின்னத்தங்கம்
9. பண்டாரம் பழனிவேல்
10. பண்டாரம் தர்மலிங்கம்
11. பண்டாரம் புவிராசா

எல்லோரும் வளலாய், அச்சுவேலி.

எதிர்மனுதார்கள்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிக்கப்பட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்தை நிரூபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986ம் ஆண்டு மாசி மாதம் 05ம் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன தாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றனர்.

1985ம் ஆண்டு மார்கழி மாதம் 05ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி

**ஆழ்வார் சிவபாதசுந்தரம்,**
பதிவாளர்.

தயாரித்தவர்:
**செ. பேரின்பநாயகம்,**
மனுதாரின் சட்டத்தரணி.
(2359)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

### மலிவு விற்பனை

விற்று தீர்ப்பதற்காக உள்நாட்டு வெளிநாட்டு ஜவுளி வகைகள் மலிவு விலையில் விற்பனையாகிக் கொண்டு இருக்கின்றன. 31-12-85 வரை மட்டுமே, வனஜா ரெக்ஸ்ரையில்ஸ், 144, மொடேர்ன் மாக்கற், யாழ்ப்பாணம். [2512]

### யாழ்ப்பாண அக்கடமி க. பொ. த. உயர்தர பரீட்சை ஆகஸ்ட் 1986 துரிதமீட்டல் வகுப்புகள்

86ம் ஆண்டுப் பரீட்சைக்கான துரித மீட்டல் வகுப்புகள் 6-1-86ல் ஆரம்பமாகின்றன. பாடத்திட்டம் முற்றுக மீட்டல் செய்யப்படும். சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் விபரங்கள் தேவையாயின் காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

**அதிபர்.**
தொலைபேசி எண்: 22617.
376, பிரதான வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(2465)

மு. க. முத்துக்குமார்
சட்டத்தரணி,
பருத்தித்துறை.

### பின்முற்றுகும் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

துன்னாலை வடக்கு ஏகாம்பரம் சிவலோகநாதன் பெண் செல்வமணி என்பவரது மரணசாதனமில்லா சொத்துவிடயத்தில்:

— மரணமெய்தியவர்

ஏகாம்பரம் சிவலோகநாதன், துன்னாலை வடக்கு, கரவெட்டி.

— மனுதார்

வழ. இல,
மரணசாதன
நியாயாதிக்கம்: 1237

எதிர்

(1) சிதம்பரநாதன் மயில்வாகனம்.
(2) மயில்வாகனம் செல்வராசா.
(3) மயில்வாகனம் சிதம்பரநாதன்.

மூவரும் துன்னாலை வடக்கு, கரவெட்டி.

— எதிர்வாதிகள்.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக ஷெ [illegible] நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டு அதில் அதற்கிணங்க பின்முற்றுகும் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. எனவே அக்கறையுள்ள எவரேனும் 1986ம் ஆண்டு மாசி மாதம் 28ம் திகதி காலை 9-30 மணிக்கு இம் மன்றின்முன் தோன்றி அவ்வாறு பதியப்பட்டபின் முற்றுகும் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் ஏதும் இருப்பின் அவற்றை தெரிவித்து கொள்ளுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1985-ம் ஆண்டு மார்கழி மாதம் 20ம் திகதி

நீதிமன்றின் கட்டளைப்படி
ஒப்பம்:
ச. நடராசா
பதிவாளர்;

வரைவு;
ஒப்பம்:
மு. க. முத்துக்குமார்
மனுதாரின் சட்டத்தரணி.
(2609)

### தொண்டா வவனியா விஜயம்

(வவனியா)

கிராமிய கைத்தொழில் அமைச்சரும், இ. தொ. கா. வின் தலைவருமான திரு. எஸ். தொண்டமான் ஜனவரி மாதம் வவனியா வரவழைக்க இங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்ப்பிரதேசங்களில் பிரார்த்தனை வைபவங்கள் இ. தொ. கா,வின் அனுசரணையுடன் தைப்பொங்கல் தினத்தன்று ஆரம்பமாகவுள்ளது. இதனைத் தொடர்ந்து மூன்று மாதத்துக்கு இப்படியான பிரார்த்தனை வைபவங்கள் இடம்பெறவுள்ளன.

### பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

நம்பிக்கைச் சட்டத்தின் 42(2)ம் பிரிவின் கீழ் செய்யப்படும் விண்ணப்பவிடயத்தில்,

குமாரசாமி ஸ்ரீசண்முகதேவ், அல்வாய் தெற்கு. மாலைசந்தை (மாலி சந்தை) ஸ்ரீ வரதராஜா விநாயகர் கோவில் தர்மகர்த்தா என்றவகையில்

மனுதார்.

வழக்கு இல: TR/ 136

எதிர்

(1) கணபதிப்பிள்ளை கணேசு,
(2) கணபதிப்பிள்ளை நடராசா,
(3) விஸ்வலிங்கம் ஸ்ரீபாலகணேசமூர்த்தி, மூவரும் அல்வாய் தெற்கு.
(4) ம. வேலுப்பிள்ளை கைம்பெண்அன்னம்மா, திருவாளி, இமையாணன், உடுப்பிட்டி.
(5) கந்தசாமி தாமோதரம் பிள்ளை.
(6) மயில்வாகனம் ஸ்ரீஸ்கந்தராஜா, இருவரும் புலோலிதெற்கு.

எதிர்வாதிகள்.

அல்வாய் தெற்கு மாலை சந்தை (மாலி சந்தை) ஸ்ரீ வரதராஜ விநாயகர் கோவிலின் வகைக்காக உரியதும் பின்னுற்காணும் அட்டவணையில் நன்கு விபரிக்கப்பட்டுள்ளதுமான ''இணவொல்லை நி. பர. 8 குளி 12 25/32'' எனும் ஆதனத்தை விற்பனை செய்து அதிலிருந்து கிடைக்கும் பணத்தில் புதிய சித்திரத்தேர் செய்வதற்காக மேற்குறித்த மனுதார் குறித்தவிற்பனைக்கு இம்மன்றின் அனுமதியைக்கோரி விண்ணப்பித்துள்ளாராகையால், குறித்த இவ் விண்ணப்பத்திற்கு மாறுக ஏதும் ஆட்சேபனைகள் இருப்பின் அவற்றை இம்மன்றில் 1986ம் ஆண்டு தை மாதம் 24ம் திகதி காலை 9 மணிக்கு தோற்றி தெரிவிக்கலாமென்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### மேற்குறித்த ஆதனஅட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வடமராட்சிப்பகுதி கட்டைவேலிக் கோயிற்பற்று அல்வாய் இமையாணன் குறிச்சியிறை ''இணவொல்லை நி. பர. 8 குளி 12 25/32'' இதற்கு எல்லை கிழக்கு சிதம்பரம் அம்பலவாணசுவாமி கோவிலுக்குரிய ஆதனம் வடக்கு 386ம் இலக்கப்படத்தில் 4ம்துண்டு மேற்கு 386ம் இலக்கப் படத்தில் 2ம் துண்டு தெற்கு ஒழுங்கையும் வீதியும் அருணசலம் சின்னையாவுக்குரிய ஆதனமும் இதடங்கல் முழுவதும் 386ம் இலக்கப்படத்தில் 4ம் துண்டான பாதை நிலத்தில் இதற்குரிய பங்கும்.

1985 மார்கழி 20ம் திகதி.

**மு. க. முத்துக்குமார்,**
(ஒப்பம்)
மனுதாரின் சட்டத்தரணி.
(2608)

### கிறிஸ்மஸ் பண்டிகை

# சென்னை கிறிஸ்தவ சமூகம் உலக சமாதான பேரணி!

(சென்னை)

**இன்று கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு தமிழ்நாட்டிலுள்ள கிறிஸ்தவ மக்கள் உலக சமாதானப் பேரணி ஒன்றை ஒழுங்குசெய்துள்ளனர். உலக அமைதியை வலியுறுத்தும்வகையிலும் அதற்காக பிரார்த்திக்கும் விதத்திலுமே இந்தப் பேரணி ஒழுங்குசெய்யப் பட்டுள்ளது.**

சென்னை நந்தனம் வை.எம்.சி.ஏ. கல்லூரியிலிருந்து இந்த ஊர்வலம் ஆரம்பமாகும். அண்ணாசாலை, சின்னமலை ஆகிய வீதிகளூடாக கந்தி மண்டபத்தை இது சென்றடையும்.

சென்னையிலுள்ள கிறிஸ்தவ திருச்சபைகளும், தேவாலயங்களும் இந்த ஊர்வலத்தில் பங்கேற்கின்றன. இன்று மாலை நான்கு மணிக்கு இந்த உலக சமாதான ஊர்வலம் ஆரம்பமாகும் சென்னை நகரில் கிறிஸ்தவ சமூகத்தினர் ஒரு சமாதானப் பேரணி ஒன்றை நடத்துவது இதுவே முதல்தடவையாகும். (கி)

### ★ ஒரு நஷ்டஈடு வழக்கு

# அமெரிக்க சிகரெட் கம்பனி வெற்றி!

நியுயோர்க், டிச 24

நஷ்டஈடு வழக்கொன்றில் அமெரிக்க சிகரெட் கம்பனி ஒன்று வெற்றிபெற்றுள்ளது.

சிகரெட் புகை பிடிப்பவரான கால்பிறேட் என்பவர் ஈரல், மற்றும் சுவாசப்பை நோயினால் மரணமானார்.

இம் மரணத்துக்கு இவர் புகைத்து வந்த சிகரட் ரகமே காரணமென்று இவரது குடும்பத்தினர், இந்த ரகத்தை உற்பத்தி செய்யும் கம்பனி மீது வழக்குத்தாக்கல் செய்திருந்தனர்.

ஆனால் ஆர்ஜ் ரெய்னோல்ட்ஸ் என்ற அக்கம்பனி இந்த வழக்கில் தனது உற்பத்திகள் தரமானவை என வாதிட்டது. அத்துடன் திரு. கால்பிறேட்டை புகைபிடிக்கும்படி தாம் வற்புறுத்தவில்லை என்றும் தெரிவித்தது.

(11-ம் பக்கம் பார்க்க)

### உலகச் செய்திகள்

## கிறீன்பீஸ் இயக்கத்துக்கு பிரான்ஸ் நஷ்டஈடு!

பாரிஸ், டிச 24

பிரான்ஸ் அரசாங்கம் நியூஸிலாந்தின் சுற்றுடல் பாதுகாப்பு இயக்கமான 'கிறீன் பீஸ்' இயக்கத்திற்கு நஷ்டஈடு வழங்க முன்வந்துள்ளது.

கடந்த ஜூலை மாதம் இந்த இயக்கத்தின் சமாதானக் கப்பலான 'றெயின் போவேரியர்' கப்பலைபிரெஞ்சு அதிகாரிகள் மூழ்கடித்தது காரணமாகவே நஷ்டஈடு வழங்கப்படவுள்ளது.

இந்த மூழ்கடிப்புத் தொடர்பாக இரு பிரெஞ்சு அதிகாரிகள் தலா 10 வருட சிறைத் தண்டனைக்குள்ளாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நஷ்டஈடு பற்றி ஆராய ஒரு பிரெஞ்சுப் பிரதிநிதியுடன் கிறீன்பீஸ் இயக்க, மற்றும்ஒரு நடுநிலைப் பிரதிநிதியும் கலந்துகொள்கின்றனர்.

கிறீன்பீஸ் இயக்கம் 10 மில்லியன் டாலர்களை நஷ்டஈடாகக் கோரியுள்ளது. (கி)

## இயன் பொத்தமும் பொலிஸ்காரரும்

இயன் பொத்தம்; கிரிக்கெட் ரசிகர்கள் அனைவரையும் தமது சகலதுறை ஆட்டத்தினாலும் கவர்ந்திழுத்த ஒரு இங்கிலாந்து வீரராவார் கிரிக்கெட்டில் சூரரான இவர், இந்த ஆட்டத்தில் நாட்டமில்லாத உலக மக்களைக்கூட தம்பால் கவனத்தைத் திருப்பச் செய்யும் வகையில் ஓர் உயர்ந்த நடவடிக்கையொன்றை அண்மையில் மேற்கொண்டிருந்தார்.

'Leukemia'; இது மிகப்பயங்கரமான ஓர் இரத்தப்புற்றுநோயாகும். இந்த வியாதிக்கான மருத்துவத்துக்கு நிதிசேகரிக்கும் முயற்சியொன்றில் தமது உடலை முழுமையாகப் பயன்படுத்தியதே அந்த நடவடிக்கையாகும்.

இங்கிலாந்தின் வடமுனையிலிருந்து, தென்முனைவரை சுமார் 850 மைல்கள் தூரத்தை அவர் Leukemia நிதிசேகரிப்புக்காக நடந்து முடித்துள்ளார். இதன் மூலம் சுமார் 4 ஆயிரம் ஸ்டேர்லிங் பவுண்களை அவர் சேகரித்திருந்தார். இவரின் அபிமானிகளும், ரசிகர்களும் இவருடனேயே இந்த நடைப்பயணத்தில் நடந்துவந்துள்ளனர்.

லண்டன் நகரமூடாக இவரின் நடைப்பயணம் வந்தபோது, இவரின் ரசிகர் கூட்டம் முண்டியடித்துக்கொண்டு இவரைத் தொடர்ந்தது. அப்போது ஏற்பட்ட வாகன நெரிசலைத்தவிர்க்க பொலிஸ்காரர் ஒருவர் துரிதமாக செயலில் இறங்கினார். அப் பொலிஸ்காரர் தமது பணியைச் செய்யும் வகையில் சிலருடன் கடிந்துகொள்ளவும் நேரிட்டது.

ஒருகட்டத்தில் இயன்பொத்தம் தனது பயணத்தில் குறுக்கிடுவதைப் பொறுக்க முடியாது இப்பொலிஸ்காரர்மீது கையினால் குத்துவிட்டார். அப்போது அந்தப் பொலிஸ்காரர் ஒரு பக்கத்தில் போய்விழுந்தார்.

ஆனால் அவர் சினங்கொள்ளவில்லை. மாறாக பொறுமையுடன் நடந்துகொண்டார். இதுகுறித்து அவர் தெரிவித்ததாவது: ''பொத்தம் நல்ல நோக்கத்துக்காகவே இந்த நடைப்பயணத்தை மேற்கொள்கிறார். எனவே அவர் மீது நடவடிக்கை எடுத்து அவரை நான் குழப்பவிரும்பவில்லை. எனது கடமையையே நான் செய்தேன். பொத்தம் தனது பயணத்தைத் தொடரட்டும்; அவரது நிதிசேகரிப்புக்கு நானும் பணம் வழங்கியுள்ளேன்'' என்றார்.

நிறத்தில் மட்டுமல்லாது பண்பிலும் 'வெள்ளையர்கள்' என்பதை அந்த இரு ஆங்கிலேயர்களும் நிரூபித்துவிட்டனர். (கி)

### இலங்கை

## தமிழ் தலைவர்கள் பாதுகாப்பு அதிகரிப்பு!

சென்னை, டிச 24

தமிழ்நாட்டிலுள்ள இலங்கைத் தமிழ் தலைவர்களுக்கு பாதுகாப்புப் பலப்படுத்தப் பட்டுள்ளது.

நேற்று முன்தினம் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆலோசகரான டாக்டர் பாலசிங்கத்தின் வீட்டில் குண்டொன்று வெடித்ததைத் தொடர்ந்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவ தினம் அதிர்ஷ்டவசமாக பாலசிங்கம் வேறொரு அறையில் படுத்திருந்ததால் காயங்களின்றித் தப்பினார்.

இச் சம்பவம் தொடர்பாக இதுவரை யாரும் கைதுசெய்யப்படவில்லை. சென்னை பொலிஸார் இப்போது புலன்விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்,

இலங்கைத் தமிழ்ப் பிரமுகர்கள் நடமாடும் பகுதிகளும், காரியாலயங்களும் பாதுகாப்புக்குட்படுத்தப் பட்டுள்ளன. [செ]

## சர்வோதயம் உதவும்

(வவனியா)

செட்டிகுளம் பகுதியில் இருந்து வெளியேறிய மக்களை மீண்டும் அங்கு குடியமர்த்தும் முகமாக அவர்களுடைய வீடுகளை திருத்திஅமைக்க சர்வோதயம் கிடுகுகளை வழங்க முன் வந்துள்ளது,

கச்சேரியில் அரச அதிபர் திரு. கே. ஸி. லோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிலேயே மேற்படி தகவலை கூட்டத்தில் கலந்துகொண்ட சர்வோதயப் பிரதிநிதி தெரிவித்தார்.

## சீனா அங்கீகரிப்பு

செய்ரோ; டிச. 24

சீனா பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை பாலஸ்தீன மக்களின் ஒரே பிரதிநிதியாக அங்கீகரித்துள்ளது.

இத் தகவலை சீன வெளிவிவகார அமைச்சர் யூ-சீ-குவெங் நேற்று கெய்ரோவில் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் ''மத்தியகிழக்குடன் சம்பந்தப்பட்ட எந்தப் பேச்சுவார்த்தையிலும் பலஸ்தீன விடுதலை இயக்கங்களும் கலந்துகொண்டால்தான் பயன்தரும்'' என்றார்

திரு. குவெங், இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக் கொள்கைளை வன்மையாகக் கண்டித்தார். (செ)

## பொழுது போக்கு விளையாட்டுக் கழகம்

[வவனியா]

வவனியா அரச ஊழியர்களுக்கான பொழுதுபோக்கு விளையாட்டுக் கழகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் பெயர் ''வெளிவட்ட விளையாட்டுக் கழகம்''

தலைவர்:- எஸ். துரைராஜரட்ணம், செயலாளர்:- எஸ். பரஞ்சோதி, பொருளாளர்:- எஸ், கிருஷ்ணபிள்ளை, போஷகர்:- அரச அதிபர் கே. ஸி. லோகேஸ்வரன். கழக ஆண்டு விருந்து வைபவம் அண்மையில் நடைபெற்றது.

## ★ புதன் மஞ்சரி ★

### நத்தார் பப்பாவின் கதை

இன்று நத்தார் தினமல்லவா?

பல குழந்தைகள் இன்று கண்விழிக்கையில் நத்தார் பப்பா -Santa Claus- தங்களுக்குப் பரிசுகள் அளித்திருப்பதைக் கண்டு மகிழ்ந்திருப்பர்.

நத்தார் பப்பா இவ்வாறு அநாமதேயமாக பரிசு வழங்கும் வழக்கம் முதலில் பிரித்தானியாவில் 18ம் நூற்றுண்டளவில் தான் ஆரம்பமாகியது.

Santa Claus என்பது Saint Nicholas எனும் போதகரின் பெயரின் மருவு ஆகும். இவர் 4 ம் நூற்றுண்டில் வாழ்ந்த பெரும் தர்ம வள்ளல். குழந்தைகளின் பாதுகாவலர்.

இவர் ஏழைகளுக்கு தாராளமாக உதவிகள் செய்தார். எனினும் அதற்காக தான் பாராட்டப்படுவதை விரும்பாததால் உதவிகள் வழங்கும் போது அநாமதேயமாகவே வழங்கினார்.

அதனால்தான் இன்றும் நத்தார் பப்பா அநாமதேயமாக வந்து குழந்தைகளுக்கு பரிசில்கள் வழங்கும் வழக்கம் உள்ளது [செ]

## மலை உச்சியில் ஜிம்மி கார்ட்டர்

கடந்த நவம்பர் மாதம் அமெரிக்க அதிபர் றீகன் சோவியத் தலைவர் கோபச்சேவ் உச்சிமகாநாடு ஜெனிவாவில் இடம்பெற்றது,

இந்த உச்சி மகாநாட்டு வேளை அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியான திரு. ஜிம்மி கார்ட்டர் நேபாளத்தில் இமயமலைச்சாரலில் மலைச்சிகரமொன்றின் 'உச்சி'யை வெற்றிகண்டார்.

'கலாபத்ரா' என்ற 18, 192 அடி உயரமான மலைச் சிகரமே கார்ட்டர் வெற்றிகொண்டதாகும். 15,000 அடியை அடைந்தபோது அவர் மனைவி றோசலின் மேலே ஏற முடியாது பின்வாங்கினார். ஹெலிகாப்டர் ஒன்று அவரை கீழ்இறக்கியது. மேலும் சிலஅடிகள் ஏறியதும் கார்ட்டரின் மெய்க்காவலாளிகளும் 'மலைக் காய்ச்சலால்' பீடிக்கப்பட்டு கீழிறங்கிவிட்டனர். ஆனால் திரு. கார்ட்டர் மட்டும் சளைக்காமல் முன்னேறி 'கலாபத்ரா'வின் 18, 192 அடியை அடைந்தார்.

தாம் இருவார காலம் நேபாளத்தில் மேற்கொண்ட சுற்றுப்பயணத்தின் ஒரு கட்டமாகவே கார்ட்டர் இந்த மலையேற்றத்திலும் ஈடுபட்டார். இதன் மூலம் தான் ஒரு மனஉறுதிமிக்க தலைவராக இருந்துள்ளதையும் அவர் நிரூபித்துள்ளார் போலும். (கி)

## பிளாஸ்டிக் ஹெலிகாப்டர்கள்

மே.ஜெர்மனியில் ஹெலிகாப்டர் தயாரிப்பது மேலும் இலகுவாக்கப்படவுள்ளது. பிளாஸ்ட்டிக் கலவைகளில் அங்கு ஹெலிகாப்டர்கள் தயாரிக்கப்படவுள்ளன. ஓரிருவராலேயே இந்த ஹெலிகாப்டர்களைச் செய்து பறக்கவிடமுடியும். கனமான உலோகப் பொருட்களோ, இயந்திரங்களோ தேவைப்படாது.

இந்த நவீன ஹெலிகாப்டர் 20 வீதம் உலோக ஹெலிகாப்டர்களிலிருந்து பாரம் குறைந்ததாக இருக்கும். M. B. B. என்ற மே ஜெர்மன் நிறுவனம் இந்த நவீன ரகத்தை தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது. ஒரு மோட்டார் காரில் இதன் பாகங்களைக் கொண்டு சென்று பொருத்திக்கொள்ளலாம்.

(கி)

## மணிவாக்கு

வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள் வெளிப்புறம் அழகாய்த்தான் தோன்றுகின்றன; ஆனால் அவற்றின் உட்புறமோ செத்தவர்களின் எலும்புக் கூடுகள்தான் நிறைந்திருக்கின்றன. —பைபிள்

# நமது நோக்கு

## ஓயாத பாடம்

இந்த உலகில் ஒரு தெய்வீக ரகசியத்தை உருவாக்க, மனிதனை ரட்சிக்க அவதரித்தவரே இயேசு பிரான்.

உலகனைத்தையும் கவர்ந்த போதனைகள் மட்டுமல்ல, உண்மையை நிலைநாட்ட சிலுவையில் அறைபட்டு உயிர் நீத்த பெருமை உலகம் என்றென்றும் நினைத்திருக்கும் வகையில் வரலாறு குறிப்பிடுகிறது.

எனவே இயேசுபிரானின் பிறந்த தினத்தை உலகம் கொண்டாடுகிறது.

சத்தியத்திற்காக தன் மனைவியை காசி மாநகரில் விற்ற அரிச்சந்திரனின் சரிதையும், இயேசுவின் சிலுவைச் சாதனையும் போன்று வேறெதுவும் தன் உள்ளத்தைக் கவரவில்லை என்கிறார் மகாத்மா காந்தி.

சாதாரண பிறந்த தினக் கொண்டாட்டம், அதற்கு மேல் அரச தலைவர்களின் பிறந்த தினக்கொண்டாட்டம் இன்று எந்த இடத்தை எடுத்திருக்கிறதென்பதை பத்திரிகைகள் பிரதிபலிக்கின்றன.

எனவே அரசர்களுக்கு அரசரான இயேசுநாதரின் பிறந்த தினம் எவ்வளவு கம்பீரமாகக் கொண்டாடப்படுமென்பதை விளக்க வேண்டியதில்லை.

ஒரே ஒருவேறுபாடு, அரச தலைவர்கள் மக்கள் இறைமையின் பிரதிநிதிகள்; காலத்தால் பதவி இழப்பவர்கள். இயேசுபிரான் போன்ற விண்ணரசின் தலைவர்கள் என்றும் நிலைத்தவர்கள்.

விண்ணுலக ஆட்சியை மண்ணுலகுக்குப் போதனையால் மட்டுமல்ல சாதனையால் நிலை நாட்டிய இயேசுநாதரின் பிறந்த தின விழா அடிப்படையில் வேறுபட்டது.

மனித சமூகம் ஒன்றுபட்டு சமாதானமாக வாழவேண்டுமென்ற கோட்பாட்டைக் கொண்ட நத்தார் கொண்டாட்டம், இன்றைய உலகில் நினைத்துப் பார்க்கக்கூடிய நிலையில் உண்டா?

எல்லா மதங்கள் விடயத்திலும் ஏமாற்றுகிறவர்கள் இருந்துகொண்டுதான் வருகிறார்கள். அதில் சந்தேகமே இல்லை. எங்கு வெளிச்சம் இருக்கிறதோ அங்கே இருளும் இருந்தே தீரும்.

ஆனால் மதவிடயங்களில் நம்மை ஏமாற்றுகிறவர்களை விட உலக விடயங்களில் நம்மை ஏமாற்றுகிறவர்கள் மிக மோசமானவர்கள். இந்த உண்மையை வற்புறுத்துவதே இன்றைய நத்தார் கொண்டாட்டத்தில் மிகப் பொருத்தமான செய்தி எனக் கருதுகிறோம்.

எமது நாட்டிலும், எங்களை ஒன்றரை நூற்றாண்டு காலமாக ஆண்ட இங்கிலாந்திலும் இதனை நாம் இன்று காண்கின்றோம்.

புறட்டெஸ்டான்டுகளுக்கும், கத்தோலிக்கருக்கும் உண்டான ஜென்மப் பகையே இன்றும் தீராத வட அயர்லாந்து பிரச்னை. மதத்தில் உருவாகி அரசியலில் இறுகி, இன்று ஆட்சியாளர்களின் கெடுபிடியால் ஐ. ஆர். ஏ, என்ற புரட்சிகர ராணுவம் பிரிட்டனிலிருந்து வட அயர்லாந்தைத் துண்டிக்க ஆயுதம் ஏந்தி பயங்கரவாத அற்புதங்களை நடத்துகிறது.

இன்று பிரதமர் தாட்சரினால் உருவாக்கப்பட்டு பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில-ஐரிஷ் உடன்படிக்கை, போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் இருபகுதியினரையும் திருப்திப்படுத்தவில்லை. காலங்கடந்த தீர்வு முற்றிய நோய்க்கு ஆரம்பத்தில் கொடுத்திருக்கவேண்டிய மருந்து இதுவென்பதை நிரூபிக்கிறது.

இலங்கைக்கு இன்று நன்றெனக் கருதப்படும் டண்டா—செல்வா ஒப்பந்தம் அன்று இருபகுதியினராலும் எதிர்க்கப்பட்டது. அதனைக் கிழிக்க முன்னின்றோரே இன்று அதனைசெயற்படுத்துவதானால், தாம் வளர்த்த கிடாயைத்தாமே கொல்வதுபோலாகும்.

தென் ஆபிரிக்காதொடக்கம், வட இலங்கைவரைக்கும் இருள்மிகுந்திருக்கிறது. ஆனால் இருள் என்றும் நிலைத்திருக்காது.

ஒளிபரப்புதல் நத்தார் தினத்தை நல்லமுறையில் கொண்டாடுபவர்களின் முதற்கடமை: அரசியல் தலைவர்கள், ஆட்சிமுறை, இவ்விரண்டிலும் பூரண நம்பிக்கை வைத்து தனி மனிதன், மனித குழாம் தத்தம் கடமைகளைக்கை விட்டால், அழிவுப்பாதை தவிர்க்கமுடியாததாகும்.

அறநெறியிலிருந்து சமயத்தைப் பிரித்துப்பார்க்கும் அலட்சியப்போக்கு, தனி மனிதனின் இன்றையஉலகில் மலிந்திருக்கும் இன்னல்களுக்கு மூலகாரணம்.

கடவுளே எல்லாமென்றும், எல்லா மக்களும், ஓர் உயிரே என்றும் உணர்வோமானால் ''என்ன குறையும் இலோம்.''

## அம்புலன்ஸ் வண்டி எரிந்தது

(வவனியா]

அநுராதபுரம் சென்ற முருங்கன் ஆஸ்பத்திரி அம்புலன்ஸ் வண்டி கண்டுவீதி றம்பாவ என்ற இடத்தில் இயந்திரக் கோளாறு காரணமாகமுற்றாக எரிந்து சாம்பலாகிவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேவிஸுக்காகவே குறித்த அம்பலன்ஸ் வண்டி அநுராதபுரம் சென்றதாகவும் இடைநடுவில் மேற்படி சம்பவம் இடம்பெற்றதாகவும் வவனியா சுகாதார அத்தியட்சகர் அலுவலக உயர் அதிகாரி ஒருவர் கூறினார். (மா)

திருவருகைக்காலச் செய்தி

## ஆனந்த இராகங்கள்

''ஆதியிலே வார்த்தைஇருந்தார். அவ்வார்த்தை கடவுளோடு இருந்தார். கடவுளாய் இருந்தார். அவருள் உயிர் இருந்தது. அவ்வுயிர் மனிதனுக்கு ஒளி.''

(அரு-1:14)

உலகிற்கு ஒளியாகி, வழியாகி, வாழ்வாகி கிறிஸ்து பாலன் பிறந்துள்ளார். மண்ணகத்தோரை விண்ணகத்திற்கு வழிகாட்டும் பாதையாகி பரமன் கிறிஸ்து அவதரித்துள்ளார். இருளில் வாழ்ந்தோரை ஒளிக்கும் பாவலத்தில் வாழ்ந்தோரை இறை இன்பத்திற்கு அழைத்துச் செல்லுகின்றார் யேசு பாலன்.

இந்த அருள்மயமான சூழலில் இருள்போக்கும் சுடராய் வந்துதித்த மீட்பரை நினைவு கூருகின்ற இவ்வேளையில் எமது அன்றாட வாழ்க்கை நிகழ்வுகளைப் பற்றிச் சிந்திப்போம்...

வசந்தகால கோலங்கள், வானில் விழுந்த கோடுகளாக மாறுகின்றன. நிகழ்கால அனுபவங்கள் வருங்காலச் சுமைகளாகத் தோற்றம் பெறுகின்றன. 'வாழ்வே மாயம், வாழ்வே மாயம்' என்றுகாயப்பட்ட மனித உள்ளங்கள் வாழ்க்கையின் அர்த்தத்திற்கு நியாயம் கேட்டு நிற்கின்றன. தெய்வம் தந்த வீட்டில் இன்று தென்றல் வீசவில்லையே. அன்பு செய்ய அன்னைகூட என்னைப் புரிந்து கொள்ளவில்லையே என்று எத்தனையோ இளம் நெஞ்சங்கள் ஏங்குகின்றன. பாசமின்றி, நேசமின்றி பாருலகில் நிலையற்ற மனிதர்கள் விரக்தியின் விளிம்பிலே நின்று விம்மி, விம்மி அழுகின்றார்கள். ஆலயத்தில் சிலை வைத்து ஆண்டவனைக் கும்பிடும் பக்தர்கள் கூட வீடியோவில் கதாநாயகி சண்டை பிடித்ததும், கண்ணீர் வடிக்கிறார்கள். ஆனால் அதே பக்தர்கள் அயலவன்செந்தணலில்வீழ்ந்து வெந்தழுவதைக் கண்டும் 'நாம் தப்பித்தோம்' என்ற உணர்வில்கண்மூடிச் செல்லுகிறார்கள். ஆயிரம் ரூபாய்களை ஆடை, ஆபரணங்களில் ஆடம்பரமாய்ச் செலவழித்தும் அயலவன் பசியாற ஐந்து ரூபா கொடுக்கவே ஆயிரம் தடவை யோசிக்கிறார்கள்.

இவ்வாறு தனக்காக, தன் குடும்பத்திற்காக மட்டும் வாழும் தன்னலப் பிரியர்களுக்குப் பிறர்க்காகத் தியாகம் செய்யும் வாழ்க்கை முறையினை மேற்கொள்ளவேண்டும் என்பதை நினைவூட்டிவழிகாட்டுகின்றார். மீட்பர் இயேசு பாசத்தினாலே உலக மோசடிகளைப்போக்க நேசக்கரம் நீட்டுகிறார் கிறிஸ்து. எப்படியும் வாழலாம் என்பதை விடுத்து இப்படித்தான் வாழவேண்டும் என்று அன்புநெறி வாழ்க்கைக்கு அவர் அத்திவாரமாகின்றார்.

அன்பு நடமாடும் கலைக்கூடம் ஒன்று கிறிஸ்து என்ற மீட்பராக அவதாரம் எடுக்கின்றது. உருவிலான் கருவாகி மரியின் மகனாக உருவம் பெறுகின்றான். அன்புணர்வைப் புரியாது மரத்துப்போன இதயங்களுக்கும் இதமூட்டுகின்றார் கிறிஸ்து.

''உன்னதங்களிலே இறைவனுக்கு மகிமையும் பூவிலகில் நன்மனத்தோர்க்கு அமைதியும் ஆகுக', (லூக்-2:14) என்ற வானோர் கீதம் நல்ல மனம் படைத்தோர்க்கேகிறிஸ்துவின் பிறப்பு அர்த்தமுடையதாகும் என்பதை எண்பிக்கின்றது. சமுதாயத்தின் அடிமட்டத்தில் அடிமைப்படுத்தப்பட்டு வாழ்வோருக்கு அகரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும் விடுதலை வழங்க முனைகின்றார் மீட்பர் கிறிஸ்து தாழ்ந்தோர் எனக் கணிக்கப்பட்டுள்ளோர் உயர்ந்தவர்களாகக் கௌரவிக்கப்படுகின்றார்கள்.

உலகிற்கு ஒளியாக, உயிருக்கு வழியாகப் பிறந்த இயேசு பாலன் அனைத்துமனித உள்ளங்களிலும் உவகை மழையைப் பொழிகின்றார். சோக ராகம் பாடுவதை விடுத்து எல்லா மனிதரும் ஆனந்த ராகம் மீட்டும் மார்க்கத்தைக் காட்டுகின்றார். 1985 ஆண்டுகளுக்கு முன்னர் வரலாற்றில் தோன்றிய இயேசு பாலன் இன்று எங்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் பிறக்க இதய ராகங்கள் பாடி இறைவனோடும், மனிதனோடும் அன்புறவில் இணைந்து அகமகிழ்வோம்.

அருட்திரு. வின்சென்ற் பற்றிக் (அ. ம. தி.)

## நாளை ஈழத்துசிதம்பரம் தேர் நெஞ்சைவிட்டுநீங்காத காட்சி

ஈழத்தின் கண் திகழும் சைவாலயங்களில் பழமையும் புதுமையும் வரலாற்றுப் பெருமையும் மூர்த்திதல தீர்த்த விசேடமும் வேதாகம நெறிமுறை தவறாத பரிபாலனமும் மற்றும் பல்வேறு சிறப்புக்கள் மிகுந்த திருத்தலம், ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் காரைநகர் சிவன் கோவிலாகும். இற்றைக்கு இருநூற்றைம்பதாண்டுகளுக்கு முன் இந்தியாவிலே வசித்த தினகரன் எனும் பெயருடைய பிராமணர் ஒருவரால் இவ்வாலயம் ஸ்தாபிக்கப்பெற்றதென்பது முன்னோர்கூற்றாகும். இவ்வாலயத்தின் தலவரலாறு பற்றிப் புராணக் கதைகள் பலஉண்டு. இப்போது இத்திருத்தலம் தேரோடும் வீதியுடன் மூன்று பிரகாரங்கள், விமானங்கள், வியத்தகு வசந்த மண்டபம், அழகிய மூர்த்திகள், அலங்கார வாகனங்கள் என்பவற்றை தன்னகத்தே கொண்டுள்ளது. இங்கே தினமும் நான்குகாலப் பூசையும் ஆண்டுதோறும் பங்குனி, ஆடி, மார்கழி முதலாம் மாதங்களில் மூன்று மகோற்சவங்களும் மற்றும் விசேடதின ஆராதனைகளும் நடைபெற்று வருகின்றன.

இச்சிவாலயத்தில் மார்கழி மாதந்தில் நடைபெறும் திருவாதிரை திருவிழா மிகவிசேஷமாகும். ஏராளமான பக்தர்கள்கூடி ஸ்ரீநடராஜப்பெருமானைத் தரிசனம்செய்து அவனருளினைப்பெற்று வருகின்றனர். இந்தியாவிலுள்ள சிதம்பரத்திற்குச் செல்லமுடியாத பன்னூற்றுக்கணக்கானோர் ஈழத்திலே உள்ள சிதம்பரமான காரைநகர் சிவன்கோவிலுக்கே நடராஜப் பெருமானின் ஆனந்தத் தாண்டவத்தைக் கண்டுகளிக்க வருவர்.

இவ்வாலயத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் திருவெம்பாவை உற்சவத்தின் ஒன்பதாவது நாளான இன்றைய தினம் நடராஜப்பெருமான் சித்திரத்தேரில் திருவீதி வருகின்றார். பஞ்சரதங்கள் இடம்பெறும் இம் மகாரத பவனியில் விநாயகர் ஐயனாருடன் சுப்பிரமணியர், நடராஜர், அம்பாள் ரதங்கள் முன்னாலும் மாணிக்கவாசகர் ரதம் பின்னாலும் வர அடியார்கள் அரோகரா கோஷம் எழுப்பி ஆனந்தக் கண்ணீர் சொரியும் காட்சி பார்ப்பார் நெஞ்சைவிட்டு நீங்காதனொன்றாகும்.

நடராஜப்பெருமான்இருந்து வரும் மகாரத வடம் பிடித்திழுத்தால் மாளாவினையாவும் மாண்டுபோகும் என்ற நம்பிக்கையோடு பக்தர் குழாம் இப்பஞ்சரத பவனியிலே வடம் பிடித்திழுப்பது தனித்துவம்மிக்கதொரு காட்சியாகும்.

தன் எல்லையில்லாக் கருணையினால் ஆன்ம கோடிகளின் தொல்லைவினை தீர்த்தருளும் தில்லை நடராஜன் எம்மனைவருக்கும் நல்லருள் புரிவதற்காக ஈழத்துச் சிதம்பரத்திலே எழுந்தருளி எம்மையெல்லாம் அழைக்கின்றான், அவனருளாலே அவன்தாள் பணிவோம்.

—க. சிறீகரன்

## மாதகல் திசைநாயகம் பற்றிய தகவல் கோருகின்றனர்

(யாழ்ப்பாணம்)

மாதகல் கிராமத்தில் 18, 19ம் நூற்றாண்டளவில் வாழ்ந்தவர் எனக் கருதப்படும் திசைநாயக முதலியார் என்பவரின் சந்ததியினர் பற்றி அல்லது அவரைப்பற்றிய வேறு விபரங்களை இவ்லின் இரத்தினம் ஆராய்ச் நிறுவனத்தினர் கோரியுள்ளனர்.

ஆரியச்சி சக்கரவர்த்திகளுக்கு முந்திய பரம்பரையினர் பற்றிய விபரங்களைத் திரட்டுவதின் அடிப்படையிலேயே மேற்படி விபரங்களை அவர்கள் கோருகின்றனர்.

இது தொடர்பாக நிறுவனத்தினர் விடுத்துள்ள ஒரு வேண்டுகோளில் பின்வருமாறு தெரிவித்துள்ளனர்.

மாதகல் சிராமத்தில் 18ம், 19ம் நூற்றுண்டளவில் வசித்தவரான திசைநாயக முத்லியாரின் சந்ததியினர் எனக் கருதுவோர் அல்லது திசைநாயக முதலியாரையோ அன்னாரது பம்பரை குறித்தோ அல்லது அவை சம்பந்தமாக வேறு விபரங்கள் அறிந்தோர் தொடர்பு கொள்ளும்படி அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

மாதகல்விசுவநாதர் முருகர், அம்பலவாணர், விசுவநாதர் கதிர்காமர், மூருகர் ஆகியோர் இன்னாரது பரம்பரையில் வந்தவர்கள் எனக் கருதப்படுகின்றன. இவர் மாதகல் விக்கிரமசிங்க முதலியாருக்கும் உறவினராகக்கூடும். திசைநாயக முதலியாரது பரம்பரையினர் யாழ்ப்பாணத்தின் வேற இடங்களுக்கு சென்ற நூற்றாண்டில் இடம்பெயர்ந்திருக்க வேண்டுமெனக் கருதுகிறோம்.

விபரம் தருவோர் இவ்லின் இரத்தினம் ஆராய்ச்சி நிறுவனம், பல்கலைக்கழக ஒழுங்கை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளாம்.

## ஆருத்திரா அபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் பழம்வீதி ஸ்ரீசித்திவிநாயகர் தேவஸ்தானத்தில் ஆருத்திராபிஷேகம் சிறப்பாக நடைபெறும்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை அதிகாலை 3-30க்கு அபிஷேகம் ஆரம்பமாகி காலை ஐந்து மணியளவில் உற்சவம் நடைபெறும்.

# கிறிஸ்மஸ் தரும் நற்செய்தி

'கிறிஸ்மஸ்' என்றுபொது வாக அழைக்கப்படும் கிறிஸ்து பிறப்புவிழா எமது சமுதாயத் திலே நன்கு அறிமுகமான விழாவாகவும், ஏதோ ஒரு வகையில் எல்லாச் சமூகத்தி னரிலும் தாக்கமொன்றை ஏற் படுத்துவதொன்றாகவும் விளங் குகிறது. 4—5 நூற்றுண்டு களாக எமது நாட்டிலிருந்த காலனித்துவ ஆட்சியாளரின் பிரசித்திபெற்ற விழாவாக அது இருப்பதும், வியாபாரம் பெருக்கம்பெற்ற காலமாக இருப்பதும், மேலும் இக் காலத்தை அண்டியே வருட முடிவும், புத்தாண்டும், பொங் கல் விழாவும் வருவதும் இத் திருவிழா இன்னும் முக்கியம் பெறுவதற்குரிய சில காரணங் களாகத் தரப்படலாம்.

எம்மவரின் சமூக வாழ்விலே இவ்விதம் முக்கியத்துவம்பெறு கிற இவ்விழாவின் மத அடிப்படை என்ன என்ப தைச் சுருக்கமாக இங்குஆராய் வோம்.

## கிறிஸ்துவின் பணி

'கிறிஸ்து' (அபிஷேகம்பெற் றவர்) என்றழைக்கப்படும் இயேசு ஒரு வரலாற்று மனி தன், வரலாற்று நிபுணர் களின்படி ஏறத்தாழ 1987 ஒரு டங்களுக்கு முன் யூதேயாவிற் பிறந்தார். ஒரு 'சாதாரண' குடும்பத்திற் பிறந்த இவர், தாம் இறைவனால் அழைக்கப் பட்டு, சிறப்பான பணி ஒன் றிற் ாக இறைவனால் அபிஷே கம் பெற்றவர் என்டதைப் பூரணமாக உணர்ந்து செயற் பட்டார் பப்பட்டவர் என்பதற்குச் சான்று பகர்ந்தன.

கிறிஸ்து இவ்வுலகில் வாழ் ந்தபோது 'இறைவனின் அர சையே போதித்தார். காலம் நிறைவேறிற்று; கடவுளரசு நெருங்கிவிட்டது. மனந் திரும்பி, இந்நற்செய்தியை நம்புங்கள். (மாற்கு 1:15) என்ற அவரின் ஆரம்பச் செய் தியையே, தமது பகிரங்க வாழ்வில் போதனையாலும், புதுமைகளாலும், வாழ்க்கைத் தத்துவங்களாலும் சிறப்பாகச் சமூகத்தால் தள்ளிவைக்கப் பட்டோருடன் இறைவனுடைய மூலமாக மக்களுக்குக் கொடு க்க முற்பட்டார். எனினும் பழமையான மறை—சமூக அமைப்புக்களைத் தழுவியோ ரும், அவற்றின்மூலம் தமது வயிற்றை வளர்க்க தலைவர் களும் இவரின் புரட்சிகரமான சிந்தனைகளையும் வாழ்க்கைத் தத்துவங்களையும் ஏற்காதது மட்டுமல்ல, அவரைத் தமக்கு இடையூறாகவும் கண்டனர் (மாற்கு 14:1—2) அக் காலத்திலிருந்த சமூக—மறை அமைப்புக்களின் குறைபாடு களைக் கிறிஸ்து கண்டித்த தோடு புதியதொரு சமூகத் திற்கு—'இறை அரசிற்கு'— அவர் வித்திட்டார். அதை ஓர் அரசியல் அமைப்பாக வல்ல, ஆனால் அன்புக் கடவு ளின் செயலாற்றலை மக்கள் மனமுவந்து ஏற்றுக்கொள் செய்வதுமே (லூக்காஸ் 6:27) இறைவனுக்கேற்ற வாழ்வு எனக்கற்பித்தார் கிறிஸ்து. அவர் பல்வேறு நோய்களினு லும் தீய சக்திகளினுலும் ஆட கொள்ளப்பட்டோரைக் குண மாக்கியதுடன் (மாற்கு 1:23-28) பாவத்தின் சுமையில்



அமிழ்ந்தியோரை விடுவித்த மையும் (மாற்கு 2:5-7) இறை வனின் அன்பிற்கும் விடுதலை செய்யும் இயல்பிற்கும் அடை யாளமாயிருந்தன.

## பழைய ஏற்பாட்டில்

கிறிஸ்துவின் வாழ்வைச் சித் திரிக்கும் நற்செய்தி நூல்கள் அனைத்தும் யூதரின்வரலாற்றை விபரிக்கும் பழைய ஏற்பாட்டு நூல்களை ஆதாரமாகக் காட்டு கின்றன. கிறிஸ்தவத்தை ஒரு வரலாற்று மறையாகக்கொள் வதற்கு யூத மக்களின் வாழ் க்கை வரலாற்றிலிருந்து அவை தொடர்வதே காரணமாயு ளது.

நாடோடியாயிருந்த ஓர் இனத்தைக் கடவுள் தமது மக் களாகத் தெரிந்தெடுத்து அவர் களை மீறப்படுத்தினுர். இவ் விஸ்ராயேல் மக்கள் இறைவ னேடு உறவுகொண்டதற்கு அடையாளமாக தேர்ந்து கொள்ளப்பட்ட மோயீன் முதலாம் தலைவர்கள் மூலமாக அவருடன் உடன்படிக்கை செய்துகொண்டார். இம்மக் கள் இறைவன் தம்மோடிருந்து தமது நன்மைக்காகச் செயற் படுகிருர். தம்மை விடுவிக்கி ருர் என்பதை எகிப்திய அடி மைத்தனத்திலிருந்து தம்மை 'அரும்பெரும் செயல்கள்' மூலம் விடுவித்ததிலிருந்து கண்டுணர்ந்தனர் (யாத்திரை ஆகமம் 15; 1—18) இந்நிகழ்ச் சியை நன்றிப்பெருக்கோடு 'பாஸ்கர்' (கடத்தல்) விழா வின் மூலம் இன்றுவரை யூத மக்கள் கொண்டாடிவருகின்ற னர். இவ்விதம் விடுவிக்கப் பட்ட இஸ்ராயேல் மக்கள் இறைவனின் கட்டளைப்படி நடப்பதன் மூலம் அவரின் பாதுகாப்பையும் பராமரிப்பை யும் பெறுவதாக சீனய்மலையில் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டனர்.

ஆனல் பிரமாணிக்கமின்றி வாழ்ந்த மக்களைத் திருத்தியும் தண்டனை கொடுத்தும், வழி நடத்தியும் வந்த இறைவன், நிரந்தரமாகவும் முழுமையாக வும் அனைத்து தீமைகளிலிரு ந்து அவர்களை விடுவிக்க ஒரு 'மெசியாவை' (வாக்குப்பண் ணப்பட்டவர்) அனுப்புவதாக வாக்குப்பண்ணினுர். (இசை யாஸ் 40:19—11) இந்த நம் பிக்கையூட்டும் எதிர்பார்ப்பே இஸ்ராயேல் மக்கள் அனுப வித்த இன்னல்கள் அனைத்தை யும் துணிவோடு எதிர்நோக் கத் துணைபுரிந்தது. இந்த நம் பிக்கையே வேதாகமத்தின் பழைய ஏற்பாடு முழுவதும் இழையோடுகிறது எனக் கூறு வது மிகையாகாது,

பல்வேறு அடிமைத்தனங் களையும் இறுதியாக உரோ மைய ஆட்சியின் பழுவையும் அனுபவித்த யூத மக்கள் அந்த மெசியாவை ஆர்வத் தோடு எதிர்பார்த்த காலத் திற்தான் கிறிஸ்து பெத்தல கேமில் பிறந்தார்.

## மெசியாவின் வருகை

தீமையும் அடிமைத்தனமும் மலைபோல் சூழ்ந்திருந்த வேளையில் எதிர்பார்த் திருந்த மெசியா ஓர் அரசனுக வந்து உரோமைய ஆட்சியிலிருந்து தம்மை விடு விப்பார் என்பதே யூதரின் எதிர்பார்ப்பாயிருந்தது அத ஞல் சாதாரண மனிதனுக, செல்வத்தையும்,செல்வாக்கை யும், அதிகாரத்தையும், ஆண வத்தையும் உதறித்தள்ளி விட்டு வாழ்ந்தபின், இறுதி யில் சிலுவைமரணத்தை அர வணைத்த 'நாடோடிப் போத கரே' அந்த மெசியா என ஏற்கப் பலர் பின்வாங்கிய மையான இறைவனுல் தரப் பட்ட விடுதலை வாழ்வையே கண்டுணராமல்விட்டதா யிற்று. ஏற்கனவே தாம் அமைத்துக்கொண்ட, அன் றேல் வாழ்ந்த சூழலுக்கும் அமைப்புகளுக்கும் இணங் கவே இறைவனின் மீட்புத் திட்டம் செயற்படவேண்டும் என்ற மனிதனின் குறுகிற போக்கு, அந்த மெசியா கொணர்ந்து மீட்பின் வழியை ஏற்றுவாழ முட்டுக்கட்டை யாகிவிட்டது.

"அன்புறவும், சமத்துவமும், சகோதரத்துவமும் மன்னிக்கும் மன நிலையும் இரக் கமும், பகிர்தலும் ஒன்றிப்பும், எம் அனைவர்க்கும் நிறைவையும் சமாதானத்தை யும், மகிழ்ச்சியை யும் தரவல்லன என்பதனை கிறிஸ் துவின் வருகை எமக்குக் கற்பிக் கின்றது."

## நாமும் கிறிஸ்துவின் மனிதாவதாரமும்

நாம் இன்று கொண்டாடும் கிறிஸ்து பிறப்புவிழா மனி தனை மீட்க இறைமகன் மனி தனுன மாபெரும் மறை பொருளையே எமக்கு வெளிப் படுத்துகிறது. அன்புக் கட வுளின் பாசக்கரத்தின் அடை யாளமாகவே கிறிஸ்துவின் வருகையும், அவரின் போத னைகள், புதுமைகள், வாழ்க்கைமுறைகள் அனைத் தையும் நாம் காண்கிறோம்.

மனிதனை நிறைவுப் பாதை யிலே இட்டுச்செல்லவே இறை மகன் மனிதனுனர். இறைவ னின் அடையாளமாகப்படைக் கப்பட்ட மனிதர் அனைவரும் ஆண்டவன் முன்னிலையிற் சமம், அவர்கள் சமஉரிமை களும் கடமைகளும் உடைய வர்கள். அவர்களிடையே அன்புறவு மிளிருவது 'வான கத்தை'யே இப் பூமிக்கு இழுத்துவருவதற்குச் சம மாகும். அனைத்துத் துன்பங் களும் சுயநலன்களும் பாவங் களும் களையப்பட்டு, எல் லோரும் ஒரே இறை - தந்தை

(6-ம் பக்கம் பார்க்க)

## அருட்திரு அன்ரன் மத்தாயஸ்

"ஆண்டவருடைய ஆவி (சக்தி, வலிமை) என்மேலே ஏனெனில், என்னை அபிஷேகம் செய்துள்ளார். எளியோர்க்கு நற்செய்தி சொல்லவும், குரு டர் பார்வை பெறுவர் என அறிவிக்கவும், ஒடுக்கப்பட் டோர்க்கு உரிமை வழங்கவும் ஆண்டவர் அருள்தரும் ஆண் டினை அறிவிக்கவும், அவர் என்னை அனுப்பினுர்" (லூக் காஸ் 4:18—19) என்று தமது பணியைப் பற்றி அவர் கூறி ஞர். அவர் தம்முடைய அழைப்பைபற்றி வினவினுர் க்கு "குருடர் பார்க்கின்றனர், முடவர் நடக்கின்றனர், தொழுநோயாளர் குணமடை கின்றனர், செவிடர் கேட்கின் றனர், இறந்தவர் உயிர்க்கின் றனர், எளியவர்க்கு நற் செய்தி அறிவிக்கப்படுகிறது. (லூக்காஸ் 7:18—83) என் ருர். வாக்குப்பண்ணப்பட்ட மீட்பர் இவ்வித வல்லமை மிக்க செயல்களைச் செய்வார் என முன்னுரைக்கப்பட்டிருந் தது. கிறிஸ்துவின் இச்செயல் கள் அவர் கடவுளால் அனுப் ளும்போது உருவாகும் அன் புறவையும் சமூக நல்வாழ்வை யுமே அவர் கண்டார்.

பரம்பொருளை — கடவுளை இறைவனைஅச்சநடுக்கத்தோடு நம்மில் பலர் நோக்குவது போலவே, முற்கால யூதமக்க ளும் கருதினர். கடவுளை பயங் கரமான நீதிபதியாகவும், குற்றங்களுக்குத் தண்டனை கொடுப்பவராகவும் காண்பது சகஜமாயிருந்தது. ஆனுல் கிறிஸ்துவோ கடவுளைத் 'தந்தை' என்ற உறவோடு நோக்கவும், தொடர்புகொள் வும் கற்பித்தார். 'அப்பா, தந்தாய்' [லூக்காஸ் 11: 2) என்ற உறவிலே இறைவனைக் காணவும், இறைவன் அன்பும் இரக்கமும் உள்ளவர் என்றும் குற்றம் புரிந்தவனைத் தேடிச் செல்லும் அன்புத் தந்தை (லூக்காஸ் 15: 20:21) என் றுணர்ந்து செயற்படவும் மக் களுக்குக் கற்பித்தார். சட்ட மும் சடங்குகளும் அமைப்புக் களுமல்ல, ஆனுல் அன்புள்ளத் தோடு சகமனிதரோடு வாழ் வதும், பகைவரையும் அன்பு

## இனிய இரவிலே...!

பனி பொழியும் இரவு
பவம் பொழியும் உலகில்
கனி பொழியும் யேசு
கதிர் பொழிய லானுர்
நனி பொழியுங் கருணை
நதி பொழியும் நீராய்
மணி பொழியும் தேவன்
மண் பொழியலானுர்!

மை தோயும் வானம்
மழை தோயும் பூமி
வை தோயும் தேவன்
வரம் தோய லானுர்
கை தோயும் மந்தை
கண் தோயும் கூடி
பொய் தோயும் உலகம்
புறம் தோயும் அம்மா.

குளிர் பொங்கும் சாமம்
குடில் பொங்கும் சோதி
எழில் பொங்கும் தூதர்
இதழ் பொங்கும் பாடல்
களி பொங்கும் எங்கும்
கடல் பொங்கல் போல
விழி பொங்கும் காட்சி
விதம் பொங்கும் அம்மா!

- வாகரைவாணன்

## சீரார் திருச்சிலுவைச் செல்வமே கண்ணுறங்கு!



ஆராரோ ஆரிவரோ
அன்னைமரி பாலகனே
சீரார் திருச்சிலுவைச்
செல்வமே கண்ணுறங்கு

மண்ணுறங்கும் வேளையில் எம்
மாசுறங்க வந்தவனே
கண்ணுறங்குகண்ணுறங்கு
கண்மூடி நீயுறங்கு

கள்வர்களின் நடுவில்உனைக்
கட்டிவைக்கும் மானிடர் இந்
நள்ளிரவில் வரமாட்டார்
நாயகனே நீயுறங்கு.

- சத்தியசீலன்

## பால யேசு வருகிருர்

பால யேசு வருகிருர்
பாச முடன் அழைக்கி ருர்
பாலா தேவா பற்றி மா
பால யேசு வருகி ருர்

அன்பு வேண்டும் அதனு லே
அகில முய்யும் என்கி ருர்
ஒன்றே வேண்டும் உங்க ளின்
உள்ளம் வேண்டும் என்கி ருர்
டட்சி களைப்பா ருங் கள்
பிதா காக் கின்ரு ரே
பட்ச முள்ள உங்களை யான்
விட்டா விடுவேன் என்கி ருர்

தேவ குமா ரன்நா னே
திரண்டு வாரீர் என்கி ருர்
பாவங் களைக் களை வேன்
பய மெதற்கு என்கி ருர்!

- மணிமன்றன்

# கிறிஸ்மஸ் தரும்....

5-ம் பக்கத் தொடர்ச்சி]
யின் பிள்ளைகளாக வாழ வழி காட்டுவதே கிறிஸ்து பிறப்பு விழா எமக்குத் தரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி. இச் சிந்தனை அறிவியற்துறையுடன் நின்றுவிடாது வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் செயலில் மிளிருவதே கிறிஸ்துவின் வாழ்வை ஏற்றோரில் காணப்படவேண்டிய உன்னத பண்பாகும்.

எனினும் மனித பெலவீனங்களும், சுயநலன்களும் அமுக்கும்போது அவன் மனந்தளராது, துணிவோடு எதிர்நீச்சல்போடவும், தன் குறைகுற்றங்களினூடாக வாழ்வின் நிறைவை எய்தவும் அவனுக்கு கிறிஸ்துவின் வருகை துணைநிற்கிறது, ''பாவம் பெருகிய இடத்தில் இறை அருள் அணைகடந்து பெருக்கெடுத்தது'' (உரோ. 5; 20) என்ற சின்னப்பரின் கூற்றுக்கிணங்க, மனிதன் நம்பிக்கையோடு வாழத் துணைபுரிகிறது,

இன்றைய எமது சூழலிலே, மனித மாண்பும் உயிரும் பெறுமதியற்றவையாகி எம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும், அனைத்தையும் இழந்து தவிக்கும் இவ்வேளையிலும், நாம் நம்பிக்கையோடு வாழ கிறிஸ்துவின் பிறப்பு எம்மை அழைக்கின்றது, பொய்மையும் பிரிவினைகளும் எம்மை அழிக்கப் போகின்றது' என்று அஞ்சும் இவ்வேளையிலும் 'எம்மால் ஒன்றுமே ஆகாது' என்று வேதனையுறும் இத் தருணத்திலும் ஏழ்மையிற் பிறந்து கொடிய அரசனுக்கு அஞ்சி ஓடிய கிறிஸ்து எமக்குத் துணிவையும் நம்பிக்கையையும் தருகிறார். அன்புறவும், சமத்துவமும் சகோதரத்துவமும், மன்னிக்கும் மனநிலையும், இரக்கமும், பகிர்தலும் ஒன்றிப்பும் எம்மனைவர்க்கும் நிறைவையும், சமாதானத்தையும் மகிழ்ச்சியையும் தரவல்லன என்பதனை கிறிஸ்துவின் வருகை எமக்கு கற்பிக்கின்றது.

''உன்னதங்களிலே
கடவுளுக்கு மகிமை
உண்டாகுக;
உலகிலே அவர் தயவு
பெற்றவர்க்கு அமைதி
ஆகுக'',
(லூக்காஸ் - 2:14)

## ''இறை நேசர்களை நினைவு கூர்வோம்''

(வவனியா)
''ஆத்மாக்களைச் சுத்தப்படுத்தி மனித சமுதாயம் முன்னேற வழி சமைத்தவர்கள் இறை நேசர்கள் அவர்களின் பணியில் பாபச் சுமையில் மூழ்கியிருந்தவர்கள் புனிதர்களாக மாறினார்கள் இவ்வேளையில் இறைநேசர்களின் பணிகளை நினைவு கூருதல் அவசியமானது.

இவ்வாறு முஹீய்யதீன் அப்துல் காதிர் ஜீலானி(ரஹ்)அவர்களது ஞாபகார்த்த வைபவத்தில் உரை நிகழ்த்திய அகில இலங்கை கதீப்மார் சம்மேளனத்தின் தலைவர் அல்ஹாஜ் மௌலவி கே. எம். எச். காலிதீன் குறிப்பிட்டார்.

வவனியா நகர் ஜும்மாமஸ்ஜிதில் நடைபெற்ற இவ் விசேட வைபவத்துக்கு பள்ளிவாசல் கதீப் மௌலவி எம். எஸ். அப்துல் ரஹீம் தலைமை தாங்கினார்.

தொடர்ந்து உரையாற்றிய மௌலவி காலிதீன் முஹிய்யதீன் அப்துல் காதிர் ஜீலானி அவர்களின் அயராத முயற்சியினால் இஸ்லாம் வளர்ந்தது. தென் கிழக்காசிய நாடுகளுக்கு அவர் மேற்கொண்ட பயணத்தின் காரணமாகவே அந் நாடுகளில் இஸ்லாம் வளர்ச்சியடைய எதுவாயிற்று இறைநேசர்களுக்கு இறை அந்தஸ்து கொடுப்பது, இணை வைப்பதாகி விடும்'' என்றார்.

## நெல்லியடியில் இலவச வகுப்புகள்

(கரவெட்டி)
நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இலவச பிரவேச, பாலபண்டித, பண்டித, சைவபுலவர் வகுப்புகள் எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

உடுப்பிட்டி கல்வி மூலவள நிலையத்தின் ஆதரவில் நடத்தப்படும் இவ்வகுப்புகளை வேலணை வட்டாரக்கல்வி அதிகாரி பண்டிதர் பொன். கணேசன், பிரம்மஸ்ரீ கை. நமசிவாயக்குருக்கள், திருவாளர்கள் வீ. நடேசு, கே. நவரத்தினம், எழுத்தாளர்களான கருணையோகன் குப்பிளான் ஐ. சண்முகம் ஆகியோர் நடத்துவார்கள்.

இவ் வகுப்புகளில் பயில விரும்பும் ஆசிரியர்கள், க. பொ. த. உயர்தர வகுப்பில் சித்தியடைந்த மாணவர்கள், உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## அமைதிக்காக பஜனை!

(யாழ்ப்பாணம்)
நாட்டில் அமைதி ஏற்படுவதற்காக, நல்லூர் நல்லலஷ்மி வீதியிலுள்ள ஸ்ரீ சத்திசாயி பகவான் சங்கத்தில் 25 ம் தேதி மாலை விசேட பஜனை நடைபெறவிருக்கிறது. (க)

## அம்பிகையின் 108 அருச்சனை

(யாழ்ப்பாணம்)
அம்பிகையைத் துதிக்கும் தமிழ் மந்திரங்கள் என்று அழைக்கப்படுகின்ற 108 போற்றிகளை சிறுபிரசுரமாக வழக்கம்பறை பஜனைச்சபையினர் வெளியிட்டுள்ளனர். இப்பிரசுரத்தில் தேவாரம் திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, புராணம் என்பன வற்றிலும் ஒவ்வொரு பாடல் இதில் இருக்கின்றன. நூற்றெட்டுப் போற்றிகளும் அ. ஆ. இ. என்னும் எழுத்துக்களுடன் ஆரம்பிக்கும் அகராதி வரிசையில் அமைந்துள்ளமையும் ஒரு சிறப்பம்சமாக விளங்குகின்றது. (ப)

யாழ் மக்களுக்கு
ஓர் நற்செய்தி
வெளிநாட்டுப் பயணத்திற்கான
விமான டிக்கட்டுகள், பாஸ்போட்,
விசா, பிரயாணிகள் காசோலைகள்
மற்றும் பிரயாணங்களுக்குத் தேவையான
சகல ஒழுங்குகளும் செய்துதரப்படும்.
தொடர்பு கொள்ளுங்கள்:
விஜயமாலா ரவல்ஸ்,
213, 215, செட்டியார்தெரு, கொழும்பு 11.
தொலைபேசி: 547205
நேரில் தொடர்பு கொள்ள முடியாதவர்கள்
யாழ்ப்பாணத்தில் தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்:
திருமதி சி. கஜமுகலிங்கம்,
ரஜனி நிலையம், ஊரியாட்டி, சுன்னாகம்.
(9315)

பலவருடங்களாக யாழ். மாவட்ட மாணவர்களின்
அன்றாடதேவைகளை நாமே நிறைவு செய்து வருகிறோம்
1986-ம் ஆண்டிலும்
உங்கள் தேவைகளை நிறைவு செய்வோம்
அப்பியாசக் கொப்பிகள்
(இலங்கை அரசாங்கத்தின் தரக்கட்டுப்பாட்டுப் பிரிவினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை கடதாசிக் கூட்டுஸ்தாபன கொப்பிகள்)
* பாடசாலை உபகரணங்கள்
* காகிதாதிகள்
* மின்சார உபகரணங்கள்
* மின்னியல் பொருட்கள்
* அலங்கார சாதனங்கள்
இம்மாதம் 23-ந் திகதி முதல் எமது நிறுவனம் பாடசாலை மாணவர்கள், மொத்த வியாபாரிகள், சில்லறை வியாபாரிகளின் நலன்கருதி பொங்கல்தினம் வரை சகல விடுமுறைதினங்களிலும் காலை 8-00 மணி முதல் மாலை 7-00 மணி வரை திறந்திருக்கும்.
கொழும்பு விலையில் யாழ்நகரில் விற்பனைசெய்யும் ஒரே நிறுவனம்:
அம்பலவாணர் அன் சன்ஸ்
196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24291

லீடா
முழு ஆடை நிறைந்த பால்
★ உடனே கறந்த பசுப்பாலின் ருசி!
★ பால் வெண்ணெய் கூடுதலாக உள்ளது!
★ இணையற்ற சக்திமிக்க பால்!
• உலகில் மிகச் சிறந்த பால் பண்ணைகளை கொண்ட - ஒல்லாந்திலிருந்து ''லீடா'' கிடைக்கின்றது.
• பசுவினிடமிருந்து வாடிக்கையாளரை சேரும் வரை, கைபடாதது, அசலானது என உத்தரவாதமளிக்கப்படுகின்றது.
• டின்களில் முத்திரையிடப்பட்டு புதிதாகவே கிடைக்கின்றன






விற்பனையாளர்
மில்லர்ஸ் லிமிடெட்
IMAGE

## ஆர்ப்பாட்ட ஊர்வலம்: கூட்டுக்குழு தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

வடபிரதேச தொழிற்சங்கங்களின் கூட்டுக்குழுவினால் முன்வைக்கப்பட்ட ஐந்து அம்சக் கோரிக்கைகள், வட கிழக்குப் பிரதேசங்களில்வாழும் தமிழ்ப் பேசும் மக்கள் இராணுவ அட்டூழியங்களினால் இன்னல்களுக்குள்ளாக்கப்பட்டவர்களுக்கு தீர்வுகாணும் நோக்குடன் முன்வைக்கப்பட்டன. இந்த கோரிக்கைகளை யாழ் பிரதேசத்தில் இயங்கிவரும் பொதுஸ்தாபனங்கள் ஏற்று ஒன்றிணைந்து செயல்பட தீர்மானித்தது தமிழ்பேசும் மக்களின் போராட்டமாக அமைய வழிவகுக்கின்றது''

இவ்வாறு வடபிரதேச தொழிற்சங்கங்களின் கூட்டு குழுவின் அமைப்பாளரும் கம்யூனிஸ்ட்கட்சிப் பிரமுகருமான திரு. எஸ். விஜயானந்தன் கூறினர்.

யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கை ஆசிரியர்சங்க காரியாலயத்தில் இக் கூட்டம் நடைபெற்றது, கூட்டுக்குழுவின் அழைப்பின்பேரில் பிரஜைகள் குழுக்கள், இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கம் கிராமிய உழைப்பாளர்சங்கம், அன்னையர்முன்னணி, பல்கலைக் கழக மாணவர் பிரதிநிதிகள், தமிழ் மகளிர் பேரவை, விழிப்பு மன்றம் உட்பட பல வெகுஜன அமைப்புகள் பங்கு பற்றின.

இராணுவ அத்துமீறல்களையும், சாதாரண பொதுமக்களைக் கொலைசெய்வது அப்பாவிப்பொதுமக்களுக்கு அன்றுடம் இழைக்கப்படும் அநீதிகளையும் இன ரீதியான ஒடுக்குமுறைகளையும், இந்த அரசாங்கத்திற்கும், சர்வதேச ரீதியாகவும் வெளிப்படையாகவும் கூட்டுவதற்கு சகல பகுதி மக்களையும் கொண்ட ஒரு எதிர்ப்பு அணி உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அணியை ஆரம்பித்து விஸ்தரித்து காத்திரமான செயல்பாடுகள் உள்ள ஸ்தாபனமாக உருவாக்கப்படும். ஆர்ப்பாட்ட ஊர்வலம் வடிவிலான போராட்டம் நடத்துவதெனவும் இக்கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. வெகுஜன ஸ்தாபனங்களை உள்ளடக்கிய குழு ஒன்றும் ஸ்தாபிக்கப்பட்டது.

## ஆங்கில கட்டுரை போட்டியில் பரிசு பெற்றுர்

(புலோலி)

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்ற 10ம் வகுப்பு ஆங்கில கட்டுரைப் போட்டியில் வட இந்து மகளிர் கல்லூரி மாணவி செல்வி சத்யரேகா சிவப்பிரகாசம் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார். இவர் யாழ். தொழில்திணைக்கள தொழில் அதிகாரி திரு. கே. சிவப்ரகாசம் விஞ்ஞான ஆசிரியை திருமதி சிவப்பிரகாசம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியாவார்.

## வடபகுதி சர்வோதய வெளிக்கள இயக்குநர்

[நமது வவனியா நிருபர்]

வடபகுதி சர்வோதய வெளிக்கள இயக்குநராக திரு. க. கதிரமலை நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், வவனியா, மன்னர். கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் இவருடைய நிர்வாகத்தின்கீழ் இயங்கும்.

நெடுங்கேணி தண்டுவான் அகதிகள் குடியேற்றத்திட்டமும், கிளிநொச்சி ஜெயபுரம் அகதிகள் புனர்வாழ்வுத்திட்டமும் இவருடைய கடந்தகாலச் சேவைக்குச் சான்றுக இருக்கும் அதே நேரத்தில் காலத்திற்குக்காலம் இடம்பெற்ற கலவரங்களில் பாதிப்புற்ற அகதிகளுக்குச் சர்வோதயத்தின் ஊடாக இவர் பல உதவிகளையும், வேண்டிய ஊக்கத்தையும் அளித்து வந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பல வெளிநாட்டுத் தொண்டர் ஸ்தாபனங்களின் வேண்டுகோளுக்கிணங்க வடபகுதி சர்வோதய பணியில் இவர் ஈடுபட்டுள்ளார்.

வவனியா - முல்லைத்தீவு மாவட்ட சர்வோதய இணைப்பாளராகக் கடமையாற்றிய திரு. கதிரமலை டிசம்பர்மாதம் தொடக்கம் வடபகுதி சர் சர்வோதய வெளிக்கள இயக்குநராகப் பதவியுயர்வு பெற்றுள்ளார்.

1963-ம் ஆண்டு அகதிகள் பிரச்னை ஏற்பட்டபோது அகதி முகாம்களுக்கு வேண்டிய உதவிகளும், ஒத்தாசைகளும் இவரின் மூலம் கிடைத்தன. வவனியா, கண்டி அசம்பாவிதத்தின்போது இவருடைய குடும்பமே அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

Lipton

எச்சரிக்கை!

லிப்டன் லாவோஜி

போலி லாவோஜி பக்கெட்டுகள் விற்பனைக்கு விடப்பட்டுள்ளதாக எமது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

1979ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க வர்த்தக அடையாள சட்டத்தின் பிரகாரம், பதிவுசெய்யப்பட்ட லாவோஜி வர்த்தக அடையாளத்தை மீறும் தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள் அல்லது பொருட்களை விற்பனை செய்வோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ள முடியும். எனவே போலி லாவோஜிகளை தயாரிப்போர் அல்லது விற்பனை செய்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அசல் லாவோஜி தேயிலையை எமது கிளைகளில் அல்லது எமது மொத்த வியாபாரிகள் அல்லதுசில்லறை விற்பனையாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.




**லிப்டன் சிலோன் லிமிட்டெட்,**
த. பெ. எண்: 86,
கொழும்பு.

லிப்டன் லாவோஜி
அதி சிறந்த தேயிலைத்தூள்.

### ஒளியாக வாராயோ

மரண நிழலில்
ரத்தத்தில் நனைந்து
உயிருக்கும் பயந்து
அனைத்தையும் மிழந்து
அகதிகளாக
அடைமழையிலும்
பனிவெயிலிலும்
அடிபட்டும்
சுடுபட்டும்
அலைந்து திரியும்
எம்மக்களுக்கு
ஒளியாக வாராயோ!

—ரூபன் மரியாம்பிள்ளை

### ஒரு புதிய உலகை உருவாக்க...

அன்பின் இறையே
தந்தாய்
எமது பாவ நிலைகளுக்காக
எம்மை நீ மன்னித்திடு
வாய்.

பசுஞ்சோலையாக எமது
நாட்டை
நீ படைத்திருந்தும்
கண்ணீரினதும் துன்பத்
தினதும்
பிரிவினையினதும் இழப்புக்
களினதும்
பூமியாக அதனை நாம்
மாற்றிவிட்டோம்.

மக்கள் மக்களோடும்
இனம் இனத்தோடும்
சகோதரன் சகோதர
னேடும்
குழு குழுவோடும்
சச்சரவிடும் நிலையை
நாமே உருவாக்கி
விட்டோம்.
அதிகார தலைமைத்துவ
ஆசைகளும்
வரட்டுத் தத்துவங்களும்
சுயநலப் போக்குகளும்
ஆணவச் செயற்பாடுகளும்
எம்மை அடிமைப்படுத்த
நாம் வழிவகுத்துவிட்
டோம்.

விடுதலை நல்கவந்த
அன்புக் கிறிஸ்துவே
அன்புள்ளம் எம்மில்
வளரச் செய்து
எமக்கு உன்
விடுதலை தந்திடுவாய்

உம்மீதுதுள்ள எமது
விசுவாசம்
நாம் விடுதலை பெறவும்
புதியதொரு உலகை
சகோதரத்துவம் நிறை
சமுதாயத்தை
நாம் உருவாக்கி வளர்க்க
எம் அனைவர்க்கும் நீ
துணிவு தந்திடுவாய்.

றெஜி

# "வாழ்க்கையில் இலட்சியம் வேண்டும்"

(புலோலி)

''இன்றைய காலகட்டத்தில் மாணவர்கள் தங்களால் இயன்ற உதவிகளை மற்றவர்களுக்குச் செய்துகொள்ளப் பழகிக்கொள்ளவேண்டும். எங்களிடமிருக்கும் போது நாங்கள் மற்றவர்களுக்குக் கொடுத்தால் எங்களிடமில்லாதபோது எங்களுக்குத் தேடிவந்து தருவார்கள். என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இதனை எமது வாழ்க்கையில் இலட்சியமாகக் கொண்டு செயல்பட வேண்டும்.''

இவ்வாறு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவர்களின் போதனைகளுக்கு உதவி செய்த ஒன்பது உயர்தர வகுப்புப் பரீட்சை எடுத்தமாணவர்களுக்கு கல்லூரியின் இந்து மன்றததினல் நடத்தப்பட்ட பாராட்டுவிழாவிலும், பரிசளிப்புவைபவத்திலும் கலந்துகொண்டு பரிசில்களை, வழங்கி உரையாற்றிய இந்து மன்ற உபதலைவர் திரு. சிவா கிருஸ்ணமூர்த்தி குறிப்பிட்டார்.

இவ்விழாவிற்கு இந்துமன்றத் தலைவர் திரு. கே. நடராசா தலைமைதாங்கினர். தொடர்ந்து உரையாற்றிய திரு. சிவா. கிருஷ்ணமூர்த்தி குறிப்பிட்டதாவது;

''பொது சேவைகளைவழங்குவோரைப் பாராட்டிக் கௌரவிக்க வேண்டியது மிக முக்கியமாகும். அப்போதுதான் அவர்கள் பொதுச்சேவைகளைச் செய்வதில் ஊக்கமடைவார்கள். மாணவர்களின் கல்விப் போதனைக்கு உதவிகளை வழங்கிய இம்மாணவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்படுவது மகிழ்ச்சிக்குரியதாகும். இம் மாணவர்கள் தாமும் கற்று தமது உடன்பிறப்புக்களான கீழ்வகுப்பு மாணவர்களின் கல்விப் போதனைக்கு உதவி செய்தது பெருங்காரியமாகும். இவர்களின் எதிர்காலம் சிறப்பாக அமையும்.''

உயர்தர வகுப்புப் பரீட்சை எடுத்தவர்களான செல்வன்கள் ஆர். அருள்நாதன், ஜொறின் சேவியர், எஸ் முகுந்தன், என். முகுந்தன், வி. இரவிசங்கர், கே. பிரபாகரன், வி. சிதம்பரநாதன், எஸ். கே பிரபாகரன், ஆர், இராஜசெல்வம் ஆகிய ஒன்பது மாணவர்களுக்கும் சுமார் 2,000 ரூபா பெறுமதியான ஆங்கில அகராதிகள் பரிசாக வழங்கப்பட்டன.

# இயக்குநர்சபை புதிய நிர்வாகிகள்

(புலோலி)

அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க இயக்குநர் தெரிவுததேர்தல், சங்க மண்டபத்தில் யாழ் சிரேஷ்ட கூட்டுறவுஆக்க உதவி ஆணையாளர்கள் திரு. எஸ். சண்முகலிங்கம், திரு, எஸ். வேலாயுதபிள்ளை ஆகியோரின் கண்காணிப்பில் நடைபெற்றது.

இத் தேர்தலில் முன்னள் தலைவர் லயன் தி. கமலநாதன் தலைமையிலான குழுவும், டாக்டர் எஸ். இராஜலிங்கம் தலைமையிலான குழுவும் போட்டியிட்டது,

போட்டியில் லயன் தி.கமலநாதன் தலைமையிலான குழுவே சகல (ஏழு) இயக்குநர் சபை உறுப்பினர் பதவிகளையும் கைப்பற்றிக்கொண்டது. இயக்குநர்சபை உறுப்பினர் விபரங்கள்:

லயன் தி. சமலநாதன் (66 வாக்குகள்) திரு, வ. திருஞானசம்பந்தன் (60 வாக்குகள்), திரு மு. தர்மலிங்கம் (58 வாக்குகள்), திரு. த. செல்வரத்தினம் (57 வாக்குகள்), திரு. சு. முத்துக்குமாரசாமி (56 வாக்குகள்), திரு. பொ. இராசதுரை (55 வாக்குகள்), திரு வி. சிவபாலன் (52 வாக்குகள்).

இத்தேர்தலில் 22 கிளைகளைச் சேர்ந்த 100 பொதுச் சபை உறுப்பினர்கள் வாக்களித்தனர். இறுதியில் வெற்றியீட்டிய முன்னள் தலைவர் லயன் கமலநாதன் பொதுச்சபை உறுப்பினர் மத்தியில் உரையாற்றினர்.

## சிவப்பு மகன்

மானிட தர்மங்கள் நிலைத்து நிற்க
மலர்ந்தனன் கன்னித்தாய் மயிலின்
சேயென மாட்டுத் தொழுவமதில்
தூய ஒளியாம் யேசுபிரான்
மேய்ப்பன் இல்லா மந்தைகளாய்
மேய்ந்தவர் சாந்தி வழிதொடர்ந்து
காக்கும் கடவுள் நீதிதனைக்
காட்டிட உதித்த நீதிமகன்

வருத்தப் படும் மானிடற்காய்
வருந்திச் சிலுவை தனைச் சுமந்து
குருதி செறிய உடலெங்கும்
கூர்முள் ஆணி தலைஅறைந்து
கொடியர் செய்த வதம் பொறுத்துக்
கொள்கைப் பாங்கின் இப்
துளிதவளுப்படியே ஏற்றிக்கொழுந் இப்
பாரின் பொதுமைச் சிலம்புமகன்

நெடுந்தீவு லக்ஸ்மன்

★ ★ ★ ★

## நத்தாருக்கு ஓர் இசைப் பாடல்

ஆயிரமாயிரம் தாரகையே நீங்கள்
ஆனந்தக்கும்மி கொட்டுங்களே
பாலன் இயேசு இன்று பிறந்ததினமென்று
பாடிக் கும்மி கொட்டுங்களே?
லாலல லால லாலல லால லாலல லால லாலா லா
ஆயிரமாயிரம்

நத்தார் பிறந்தது நாடும் செழித்தது
நமக்கினித் துன்பம் என்றுமில்லை
டஞ்சம் இல்லை இனிப் பசியுமில்லை
கொள்ளை கெலை என்று எதுவுமில்லை
லாலல லால லாலல லால லாலல லால லாலா லா
ஆயிரமாயிரம்

ஆண்டவன் இயேசு பிறந்துவிட்டான் எங்கள்
அடிமை விலங்கை அறுத்தெறிவான்
கோடி கோடி இன்பம் தந்திடுவானென்று
கூடிக் கும்மி கொட்டுங்களே
லாலல லால லாலல லால லாலல லால லா லாலா

- க. தங்கம்.

## ரூபவாஹினி

காலை

9-30 கிறிஸ்தவ ஆராதனை.
10-15 கிறிஸ்மஸ் விழா நிகழ்ச்சி.
12-15 கென்னி அன்ட் டொலி.
1-15 இசை நிகழ்ச்சி.
1-45 மண்ணில் தோன்றிய விண்ணெளி — விபரணச்சித்திரம் - தமிழ்,
2-15 இராணுவ கிறிஸ்மஸ் நிகழ்ச்சி.

மாலை

6-05 செய்திகள்.
5-05 கிறிஸ்மஸ் தொலைக் காட்சி நாடகம்.
6-00 'முத்துஹர' சிறுவர் நிகழ்ச்சி.
6-30 செய்திகள் (தமிழ்)
6-55 கலையரங்கம்.
7-25 இசை நிகழ்ச்சி.
8-00 செய்திகள் (சிங்களம்)
8-25 த ஜவர்சன்ஸ்
9-00 செய்திகள்

(ஆங்கிலம்)

9-20 இசை நிகழ்ச்சி.
9-30 தொலைக்காட்சி நாடகம்.
10-30 கிறிஸ்மஸ் கரொஸ்.
11-00 கிறஸ்மஸ் ஆராதனை

## சர்வோதய இயக்கம்

(வவனியா)

ஓமந்தையில் சர்வோதய மத்தியஸ்தானம் ஒன்று வெகு விரைவில் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது எனச் சம்பந்தப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

## செட்டிகுளம் அகதிகள்

[வவனியா]

செட்டிகுளத்தில் ஏற்பட்ட கலவரத்தினல் பாதிக்கப்பட்டு தற்போது நெடுங்கேணி அகதிமுகாமில் தங்கியுள்ள செட்டிகுளம் மக்களை மீண்டும் செட்டிகுளத்திற்கு அனுப்பும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தவகையில் நெடுங்கேணி அகதி முகாமைச் செட்டிகுளத்திற்கு மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்று அண்மையில் வவனியாவில், நடைபெற்றுள்ளதாக அறியப்படுகின்றது.

## சுடரடிகள் தொழுதிடுவோம்!

மேதினியிற் கயிறறுந்து மிகவலையும் பட்டம்போல்
மாந்தர்க்கு மன்றில்லை மனவமைதி எனக்கண்ட
நீதியுறு மிறைவன்தான் நிகரில்லாக் கருணைகொண்டு
நீங்களினி யஞ்சவேண்டாம் நேசக்கை தருவனெனத்
தூதொன்று விடுத்தனனே தன்னுயிரி னியபுதல்வன்
தனையிங்கு பெரும்பேராய்த் தரநெஞ்சு வந்ததனுற்
ஆதிதொட்டே யிருந்தவார்த்தை எம்மையெலாம் மகிழ்விக்க
அவனியிலே மனிதனுனர் அவான்புக் கீடுண்டோ?

★ ★ ★ ★

எழுமுதய ஞாயிறுதான் இருள்போக்குந் தன்மையொப்ப
எளியோரின் பவங்கழுவி இன்றெம்முள் வேர்விட்டுச்
செழுங்கனிகள் தரவ்வைத்த சோதிமய மானபரன்
செங்கமலவிழிமலரச் சிறுமகவாய்ப் பூத்தெழுந்தான்
அழுதழுது வாழ்வினுக்காய் ஏங்குமன்பு நெஞ்சுகளை
அரவணைத்தும் பரிவுடனே ஆளவந்தான் சுடரடிகள்
தொழுதிடுவோம் என்றென்றும் தூயமரி மைந்தனவன்
துயரகற்றி யருள்தருவான் தொல்லுலகோ ரின் புறவே

-பாஷையூர் மு. சிங்கராயர்.



## பாலசிங்கம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கம் கொலை முயற்சி தமிழீழ விடுதலை வீரர்களுக்கான இந்திய மக்களின் நல்லாதரவை இல்லாது செய்வது அல்லது குறைத்துவிடும் செயலாகும். இலங்கையிலிருந்து வரும் தமிழ் அகதிகளுக்கான இந்திய மக்களின் பெரும் ஆதரவை அழிக்கச்செய்வதும் இதன் நோக்கமாகும்'' என்று தெரிவித்துள்ளார்.

''தமிழீழ விடுதலை இயக்கங்களுக்கிடையே ஐக்கியத்தையும் உறுதிப்பாட்டினையும் ஏற்படுத்த கலாநிதி எஸ். ஏ. பாலசிங்கம்ஆதரவு அளித்துவருபவராகும். இவர் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள குண்டுத் தாக்குதல், தமிழீழ விடுதலை இயக்கங்களின் ஐக்கியத்தைக் குலைக்க சில விஷமிகள் எடுத்துள்ள நடவடிக்கையாகும். விடுதலையை முன்னெடுத்துச் செயற்படும் தமிழீழ இயக்கங்கள்; 'மொசாட்', சி.ஐ.ஏ.' மற்றும் இலங்கை ஏஜென்டுகள் குறித்து மிகவும்விழிப்பாக இருக்கவேண்டும்'' என்றும் அவர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

''தமிழர்களின் நல்வாழ்விற்கும் நலனுக்கும் எதிரானவர்களே கலாநிதி பாலசிங்கத்தின் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்'' என்று தமிழ்நாடு சட்டசபை மேலவை உறுப்பினர் டாக்டர் இரா. ஜனார்த்தனன் தனது கண்டனத்தில் தெரிவித்துள்ளார். [ய]

## 84,000பேர்...

(1ம்பக்க தொடர்ச்சி)

அனுப்பிவைக்கும் முகமாகவே அரசு இத் தீர்மானத்தை முன வைத்துள்ளது.

தலைமன்னார் — இராமேஸ்வரம் கப்பல்சேவை, கொழும்பு — தூத்துக்குடிக் கப்பல் சேவை மேற்கொள்ள அரசு எடுத்த முயற்சிகள் தோல்வி கண்டது குறிப்பிடத்தக்கது. (பி)


**லிடோ சினிமா**

10-30, 2-30, 4-30, 6-30

இலகருேனிக் சுருமீனின் சாகசக் காட்சிகள் நிறைந்த

JAWS III

**வெலிங்டன்**

10-30, 2-30, 6-30

சிவகுமார்-பிரமிளா நடித்த

பாலசந்தரின்

**அரங்கேற்றம்**

26 முதல்

M.G.R. நடித்த

**அன்னமிட்டகை**

**எம்பயர்**

7 அடித்திரையில்

10-30, 2-30, 6-30

அர்ஜுன்-நளினி

**சிவப்புக்கிளி**

**அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு**

யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் கூடைப் பந்தாட்ட அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்:

முதற் பரிசு: கே. மயூரதன் [942] 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 2-ம் பரிசு: சி. பாலராமன் [538] அம்மன் வீதி, பண்டத்தரிப்பு. 3-ம் பரிசு: கே. கனகராஜா [1586] 11, நக்கா வீதி யாழ்ப்பாணம்.

பரிசுகளை இ. வசந்தகுமார் 625/4 ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

—அமைப்புக்குழு

2614

### கடைசி நேர வரிவிளம்பரம்

**தேவை**

சுண்டிக்குழி St. Johns கல்லூரிக்கு அண்மையில் ஒரு வீடு வாடகைக்கு தேவை. தொடர்பு:- R. Ratnarajah, Church Road, Chankanai. [2621]

**காணவில்லை**

புங்குடுதீவில் இருந்துயாழ்ப்பாணத்துக்கு விறகு ஏற்றி வந்த லொறியில் ''ஜீரோ'' சைக்கிள் ஒன்று தவறிவிட்டது. பாதையில் அநாதரவாகக் கிடந்துஎடுத்திருந்தால் எம்முடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். கே. பாலச்சந்திரன், C/o சந்திரன், 48, சத்திரமார்க்கட், யாழ்ப்பாணம். [2623]

**வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கட்கு எமது**

**கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்**

எமது கிறிஸ்மஸ் வெளியீடுகள்:-

கவுண்டமணி, ஸ்ரீவித்யா நடித்த

1. ''பணம் பத்தும்செய்யும்'' V.G.P.

லக்ஷ்மி, பாரத் நடித்த

2. ''தவம்'' (V.G.P. ORIGINAL)

எமது புதிய விலாசம்:-

**வீடியோ பிரசாத்,**

232, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

**யாழ்ப்பாணம்**

**பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது)**

**கூட்டுறவு வைத்தியசாலை பதவி வெற்றிடங்கள்**

எதிர்வரும் 19-01-86 தொடக்கம் இயங்கவிருக்கும் கூட்டுறவு வைத்தியசாலையில் கீழ்க்காணும் பதவி வெற்றிடங்கள் நிரப்புவதற்குத் தகைமையுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் 05-01-86க்குப் பிந்தாமல் சங்கக் காரியாலயத்திற்கு அனுப்பிவைக்கவும்.

1. வைத்திய அதிகாரி (M. B. B. S.)
2. தாதிமார்
3. வைத்தியசாலை அற்ரென்டன் (HOSPITAL ATTENDANT)
4. சுத்திகரிப்பு ஊழியர்

பொதுமுகாமையாளர்

127- கே. கே. எஸ். வீதி,

யாழ்ப்பாணம், யா. ப. நோ. கூ. சங்கம்.

24-12-85. (2620)

**மங்களகரமான**

**திறப்பு வைபவம்**

**நியூ மரியா சிப்பிங் அன் ரவல்ஸ்**

**New Mariya Shipping & Travels**

25-12-85 புதன் காலை வரும் தனுலக்கின சுபமுகூர்த்தத்தில் எம்மால் புதிதாக அமைக்கப்பட்ட

**நியூமரியா சிப்பிங் அன் ரவல்ஸ்**

எனும் ஸ்தாபனம் திறந்து நடாத்த இருப்பதால் உறவினர்கள், நண்பர்கள் எல்லோரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**நியூமரியா சிப்பிங் அன் ரவல்ஸ்**

நியூலலிதா மூன்று மாடி பில்டிங்,

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தலைமையகம்:

**மரியா சிப்பிங் அன் ரவல்ஸ். Ltd.**

பெலிகவுஸ் PELIHOUSE

கிறீஸ் GRECE. (2625)

**பிறந்தநாள் வாழ்த்து**

**K. தனுசன்**



FRANCE இல் இருக்கும் கருணாகரன் சர்வேஸ்வரி தம்பதிகளின் அருந்தவப் புதல்வன் தனுசன் தனது மூன்றாவது பிறந்தநாளை 25-12-85 இன்று FRANCE இல் வெகு சிறப்பாகக்கொண்டாடுகிறார். இவரை FRANCE இல் இருக்கும் டடி, மம்மி தங்கை தர்ஷா, GERMANY பெரிய மாமா, சித்தப்பா, சித்தா, சித்தப்பா CANADA சின்னமாமா பெரிய சித்தப்பா KONDAVIL அம்மப்பா, அம்மம்மா, சின்னசித்த, கோபிமாமா சின்ன அம்மம்மா, மன்மத சின்னையா, அப்பப்பா, அப்பம்மா, கலைமதி, வனிதா மாமி மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் துர்க்கை அம்மன் அருளுடன் சகல கலாவல்லவனாக பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

2627

**சமுத்திரா மல்ரி சேவிசஸ் நிறுவனத்தார்**

வழங்கும்

உளங்கனிந்த

**நத்தார்-புதுவருட வாழ்த்துக்கள்**

உங்கள் தேவை? எங்கள் சேவை!

திருமண சேவை-

எம்மிடம் டாக்டர்கள், எஞ்ஜினியர்கள், B.Sc., B. A., T. A., பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், வங்கி ஊழியர்கள், வர்த்தகர்கள், விவசாயிகள், தாரமிழந்தோர், விதவைகள், ஆகிய பலதரத்திலும் ஆண், பெண் இருபாலாரிலும் மணமக்கள் இருக்கிறார்கள். உங்கள் தேவைகளுக்கு நேரடியாகவோ கடிதமூலமாகவோ தொடர்புகொள்ளுங்கள். உடனுக்குடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இதர சேவைகள்:

காணி, வீடு வாங்க அல்லது விற்க விரும்புவோர், கட்டிடங்கள் கட்டுதல், திருத்துதல் போன்ற வேலைகள் மேற்கொள்ள விரும்புவோர்.

மின்சார உபகரணங்கள், தளபாடங்கள் வாங்க, விற்க விரும்புவோர் நேரடியாகவோ கடிதமூலமாகவோ தொடர்புகொள்ளுங்கள்.

தொடர்பு முகவரி:

**சமுத்திரா மல்ரி சேவிசஸ்**

முருகமூர்த்தி லேன்

நெல்லியடி, கரவெட்டி.

தலைமைச்செயலகம்:

303, பலாலி ரோட்,

கோண்டாவில் சந்தி, கோண்டாவில்.

**யாழ்ப்பாணம்**

**பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது)**

**தடைப்பட்ட சேவை மீண்டும் தொடர்கிறது**

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க வைத்தியசாலை மீண்டும் 1986-01-19ல் திறக்கப்படவுள்ளதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

நாட்டின் சீரற்ற தன்மை காரணமாக வெளிநாடு சென்ற வைத்தியர்களின் இழப்பினால், தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்ட வைத்திய சேவையை, யாழ். மக்கள்அநேகரின் ஏகோபித்தவேண்டுகோளுக்கிணங்க, அனுபவம்மிக்கவைத்திய நிபுணர்களின் அனுசரணையுடன் விரைவில் ஆரம்பிக்கின்றோம்.

1. சத்திர சிகிச்சை உட்பட சகல வைத்திய சேவைகள்.
2. வெளி நோயாளர் சேவை மட்டுமின்றி, உள் நோயாளர் சிகிச்சை.
3. சிறந்த நிபுணத்துவ ஆலோசனை வசதி (CHANNEL PRACTICE)
4. இரவு, பகல் சேவை.

சகல சேவைகளையும் குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்:

யாழ்ப்பாணம் பல நோ. கூட். சங்க வைத்தியசாலை,

17, கண்டி வீதி,

சுண்டிக்குளி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல. 22626 பொதுமுகாமையாளர்

(2619) யா. ப. நோ. கூ. சங்கம்.

## இப்படியும் நடக்கிறது

தீபாவளி, கிறிஸ்மஸ், புதுவருடம், தைப்பொங்கல் போன்ற பண்டிகைகளுக்கு வாழ்த்து மடல்களைக் காகிதத்தில் பலவர்ணங்களில் தயாரித்து விற்பனை செய்வது உலகறிந்த விஷயம். ஆனால் பனை ஓலையில் வாழ்த்து மடல்களைத் தயாரித்து உலக சாதனையை நிலைநாட்டியுள்ளது கோப்பாய் வட்டாரக் கல்வி மூலவள நிலையம்.

வெளிநாட்டில் இருக்கும் உறவினர்கள், நண்பர்களுக்கு அனுப்பும்போது......இம் மடலின் பெறுமானம் அங்கு பல டாலர்கள்! ஏனெனில் பனை, தமிழ் மண்ணின் சொந்த மூலவளம்.

இன்றைய எமது பத்திரிகையின் முதல் பக்கத்தில் வாசகர்களுக்கு வாழ்த்துக் கூறும் படம் கோப்பாய் வட்டார கல்வி மூலவள நிலைய பனம் பொருள் கைப்பணிப் பிரிவின் பனை ஓலை வாழ்த்து மடல் தான். பனை ஓலையில் எத்தனை கலைவண்ணம்!

'ஊடுருவி'

# "அடிபணியாமல் வாழவேண்டுமானால் நாம் உணவு உற்பத்தியில் தன்னிறைவுகாண வேண்டும்"

## தொழிலதிபர் வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]

''எவருக்கும் நாம் அடி பணியாமல் வாழவேண்டுமானால் உணவுற்பத்தியில் தன்னிறைவு காணவேண்டும். இந்த நாட்டை அந்நியர்கள் ஆக்கிரமித்தபோது உணவுத் தடை ஏற்பட்டது. அப்போது வன்னிநாடு கைகொடுத்தமையால் நாம் எவருக்கும் அடி பணியாது வாழமுடிந்தது''.

இவ்வாறு தொழிலதிபர் சிவதர்மவள்ளல் க. கனகராசா ஊரெழுப் பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் பிரிவில் நடைபெற்ற மரம்நாட்டு விழாவில் உரைநிகழ்த்துகையில் தெரிவித்துள்ளார்.

மேற்படி வழா ஊரெழு வீரகத்தி விநாயகர் ஆலய பூஜை ஆராதனைகளுடன் ஊரெழுப் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. சி. சக்திகிரீவன் தலைமையில் நடைபெற்றது.

திரு. க. கனகராசா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''இன்று எமக்கு உணவுத் தடை ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகிவருகிறது. இதில் இருந்து நாம் மீளவேண்டுமானால் செம்மண்ணுள்ள பிரதேசத்தில் வீடுகள், தொழிற்சாலைகள் கட்டப்படுவதை நிறுத்தவேண்டும். அனைத்து செம்மண் பிரதேசத்திலும் சிறந்த முறையில் பயிர்ச் செய்கை நடைபெறவேண்டும். இதற்கு வேண்டிய நீர் வளத்தைப் பெருக்குவதற்கு மழைநீர் கடலுக்கு செல்வதை தடுத்து நிறுத்தி குளங்களும், ஆறுகளும் புதுப்பிக்கப்பட்டு அவற்றில் தேக்கப்படவேண்டும்'' என்றார்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் அருளுரையில் சைவதர்மம் நிலைக்க வேண்டுமானால்பயிர்ச்செய்கை செழிக்கவேண்டும் என்றார்.

கமநலச்சேவை உதவிஆணையாளர் திரு. க. பரமலிங்கம் பேசுகையில், அனைத்துமக்களையும் விவசாயிகளாக மாற்றும் நோக்குடன் நடாத்தப்படும் இது போன்ற மரம்நாட்டு விழாக்கள், அனைத்துப் பயிர்ச் செய்கை உத்தியோகஸ்தர் பிரிவிலும் நடத்தப்படவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

மேலதிக அரசாங்க அதிபர் திரு. கா. ராமநாதர் பேசுகையில் மரங்கள் உணவுக்குப் பயன்படுவதோடு நின்றுவிடாது தெய்வீக சிந்தையை மக்கள் மனதில் ஏற்படுத்தி ஆத்மீக பலத்தை நாட்டில் மிளிரச்செய்யவும் உதவுகிறதென்றார்.

இவ்விழாவில் திரு. நா. குழந்தைவேலு, திரு. சி. கணேசு, திரு. த. கிருஷ்ணராசா, திரு. சு. சபாரத்தினம், திரு. வை. க. கணேஸ்வரன், திரு. சி. பாலசுப்பிரமணியம் ஆகியோர் உரையாற்றினர்.

பயன்தரு மரங்களையும், வீட்டுத்தோட்டவிதைகளையும் தொழிலதிபர் திரு. க. சனகராசா இலவசமாக வழங்கினார். (மா)

## இன்றைய பலன்

மாதம்:- மார்கழி
திகதி:- 10(1985-12-25) புதன்
திதி:- திரயோதசி முற்பகல வரை
நக்ஷத்திரம்:- ரோகிணி பின் இரவு வரை

மேடம்::- குறுக்கு வழியில் இறங்குவதால் சட்டத்தின் பிடியில் மாட்டிக்கொள்ள நேரும். திரைமறைவில் உங்கள் நடவடிக்கை கண்காணிக்கப்படும். பொறுமையைப் பேணி நடக்கவும்.

இடபம்:- குடும்பக் கவலையுடன் உடல்நலமும் பாதிக்கப்படும் தொழில்துறையிலும் வேறுபாடுகளுக்கு இடமுண்டு இன்று அமைதி நன்று.

மிதுனம்:- சிநேகிதவழியால் சிக்கல்களுக்குஇடமுண்டு திடீர் வரவுக்கும் இடமுண்டு. இன்று பேச்சில் நிதானம் பெருமை தரும்.

கடகம்:- மனையில் பூசல்கள் தோன்றி மறையும் தனிமையை விரும்புவீர்கள். நண்பர்களை சூழ்ச்சிவலை விரிப்பர்.

சிங்கம்:- வாகனம் செலுத்துவோருக்கு நன்மதிப்புக் கிடைக்கும் கல்வித்துறையில் புதிய உற்சாகம் பிறக்கும் அறிஞர்கள் ஆதரவும் உண்டு.

(11-ம் பக்கம் பார்க்க)


## 2-வது வருட நினைவஞ்சலி

உயர்திரு
வைத்திலிங்கம் கணபதிப்பிள்ளை
[இளைப்பாறிய பாடசாலை அதிபர்]

மண்ணுலகம்:
1917- 06- 03

விண்ணுலகம்:
1983- 12- 25

திதி:
1986- 01- 02



எங்கள் அன்புத் தெய்வமே! ஐயா! எம்மைவிட்டுப் பிரிந்து இரண்டு ஆண்டுகள் ஓடி மறைந்தும், நீங்கள் இல்லாத வெற்றிடத்தை நிரப்ப இயலாமல் எம் இதயங்கள் ஏங்குகின்றனவே! எமக்கு நல்வழி காட்டிய குலவிளக்கே! இந் நினைவுநாளிலே உங்கள் ஆத்மா சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்,

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்.

42/2, அம்மன் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (2545)



## 1-வது பிறந்ததின வாழ்த்து

செல்வி கார்த்திகா அச்சுதம்பிள்ளை



இல: 9, பலாலிரோட்டைச் சேர்ந்த அச்சுதம்பிள்ளை—ரஞ்சினி தம்பதிகளின் செல்வப் புதல்வி **கார்த்திகா** இன்று [25- 12- 1985] தனது முதலாவது பிறந்த தினத்தை வெகு விமர்சையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா. அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெயரியப்பா, பெரியம்மா. சித்தப்பாமார், சித்திமார், மாமாக்கள் (பிரான்ஸ், கனடா], குட்டிச் சித்தப்பா [கனடா], மாமிமார், மச்சாள்மார், அண்ணன்மார், அக்காமார், தம்பிமார், குடும்ப நண்பர்கள், கார்த்திகா சகல சௌபாக்கியங்களும் பெற்று சீருடன் சிறப்பாக சிறந்த கல்வி பெற்று கலிகை முருகன் அருள்பெற்று வாழ வாழ்த்துகிறார்கள்.

பொ. அச்சுதம்பிள்ளை,
[2595] 9, பலாலி ரோட், யாழ்ப்பாணம்.



## பெயர் மாற்றம்

ஏழாலை கிழக்கைச் சேர்ந்த **வேலு முருகேசு வேலுப்பிள்ளை** ஆகிய நான் எனது பெயரை **வேலு முருகேசு வேலுப்பிள்ளை யோசெப் எமிலியானுஸ் பிள்ளை** என பெயர் மாற்றம் செய்துள்ளேன். எனவே இப்பெயரில் யாருக்கும் ஆட்சேபம் இருப்பின் தெரிவிக்குமாறு வேண்டுகிறேன்.

இப்படிக்கு: உண்மையுள்ள
**வேலு முருகேசு வேலுப்பிள்ளை**
**யோசெப் எமிலியானுஸ் பிள்ளை.**

[2602]



## A. A. T. (LONDON)

Association of Accounting Technicians

PRELIM - 4th Jan., 1986
(ஒரு வருடக் கட்டணம் ரூபா 450/-)

INTER - இரண்டாம் பகுதி ஆரம்பம் 4th Jan., 1986
(ஒரு வருடக் கட்டணம் ரூபா 650/-)
(நாளாந்த, வார இறுதி வகுப்புப் பிரிவுகள் உள)

I. C. M A பரீட்சையில் நேரடியாக தேற முடியாதவர்கள்
I. C. M A. Foundation B அல்லது
ACCA Level IIக்கு நேரடியாகத் தேற
G. C. E. 'O' Level தராதரத்துடன்
பதிவுகள் எம்மால் செய்து தரப்படும்.

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**

14, St. Peters Lane, (Opp. O.L.R. Church),
Hospital Road, Jaffna.
TELE: 24355



## மலிவு விற்பனை

தரமான உடுபிடவைகளையும் Ford Suitcase வகைகளையும் தேர்ந்தெடுத்து வரும் பண்டிகைக்காலத்தை சிறப்பாக ஒருபடி முன்னேற்றத்துடன் கொண்டாடுங்கள். **மலிவு விலையில்** உடுபிடவைகளைப்பெற:

**லேடன் இண்டஸ்ரியஸ் லிமிட்டெட்**
தயாரிப்புகளைப்பெற இன்றே விரையுங்கள்:
ஞாயிற்றுக்கிழமைகளிலும் விற்பனை நடைபெறும்.

**லேடன் காமன்ஸ்,**
86, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(2485) தொலைபேசி: 22330

# ஆசிரிய சேவை முன் பயிற்சி தெரிவானோர் விபரம்

[யாழ்ப்பாணம்]

ஆசிரியசேவை முன்பயிற்சிக்குப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இத்தெரிவுக்கான கடிதங்கள் கிடைக்கப்பெறுதவர்கள், இம்மாதம் 27ம் திகதி கொழும்பு கல்வியமைச்சுக்குச் சென்று உரியகடிதத்தை பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக கல்விச்சேவை ஆணைக்குழு உறுப்பினர் கலாநிதி ஆ. கந்தையா நேற்று 'ஈழநாடு'க்குத் தெரிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்விபரம்வருமாது:

செல்வி ஜி. சுபாசினி பருத்தித்துறை, செல்வி பி. கமலாம்பாள் புலோலி, எஸ். எஸ். சண்முகநாதன் முத்தையன்கட்டு, செல்வி ஜி. ஸ்ரீ. பத்மநாதன் கரவெட்டி, திருமதி ஏ. தங்கராசா காத்தான்குடி, செல்வி எஸ், விஜயலட்சுமி செட்டிகுளம், செல்வி என். தனலட்சுமி செட்டிகுளம், என். பாலேந்திரன் காரைநகர், செல்வி எஸ். பொன்னுசாமி தொண்டமனறு, செல்வி கே. காந்திமதி கச்சேரிரோட் யாழ்ப்பாணம், செல்வி என். சுகந்தி பருத்தித்துறை, செல்வி என். பரமசுந்தரி செட்டிகுளம், செல்வன் பி. மனோகரன் யாழ்ப்பாணம், செல்வி இ. விமலேஸ்வரி வட்டுக்கோட்டை, ரி. ஏ. தேவரஞ்சன் கிளிநொச்சி, திருமதி ஆர். பரமேஸ்வரி வல்வெட்டித்துறை, ரி. சத்தியதேவன் புத்தூர், வி. பிரபாகரன் திருக்கோவில். (மா)

# 'சுருக்கெழுத்துப்பயிலும்மாணவர்கள் ஆங்கில அறிவை வளர்க்கவேண்டும்''

## வட்டாரக் கல்வி அதிகாரி எஸ். சிவராசா

[கரவெட்டி]

''சுருக்கெழுத்து ஒரு வாழும் கலை. வாழவைக்கும் கலையுமாகும். ஒரு நாளைக்கு ஒரு மணி நேரமாவது மாணவர்கள் இக்கலையில்பயிற்சிபெறவேண்டும், இப்போதுயாழ்ப்பாணமாவட்டத்தில் ஏழு பாடசாலைகளில் கல்வித்திணைக்களத்தின் சார்பில் பாடசாலைகளில் கல்வியை முடித்துக் கொண்ட மாணவர்களுக்கான ஆங்கில தட்டச்சு-சுருக்கெழுத்து வகுப்புகள் நடாத்தப்படுகின்றன. இம்முறை பரீட்சைக்குத் தோற்றிய 175மாணவர்களில் 35 மாணவர்களே தேர்ச்சிபெற்றனர்; மற்றவர்கள் தேர்ச்சி பெறுமைக்கு முக்கிய காரணம் ஆங்கில அறிவு போதியளவு காணப்படாததேயாகும். ஆங்கிலத்தில் சுருக்கெழுத்துப் படிப்பவர்கள் தமது ஆங்கிலச் சொல்வளத்தைப்பெருக்கிக்கொள்ளவேண்டும். வானொலி, தொலைக்காட்சியில் வரும் ஆங்கில உரையாடல்களை உடனுக்குடன் சுருக்கெழுத்தில் எழுதிப்பழகவேண்டும். அப்போதுதான் முன்னேற முடியும்''.

இவ்வாறு வடமராட்சிசுருக்கெழுத்துக்கழகம் நெல்லியடி மத்தியமகாவித்தியாலயத்தில் ஏற்பாடு செய்த ஆங்கிலசுருக்கெழுத்துத் திறமையைப் பரிசோதிக்கும் மாணவர்களுக்கான கேள்வி-பதில் போட்டியின் போது பிரதமவிருந்தினராகக் கலந்து உரைநிகழ்த்திய வணிகத்துறை வட்டாரக் கல்வியதிகாரி திரு. எஸ். சிவராசா கூறினர்.

வல்வெட்டித்துறை மக்கள் வங்கி ஊழியர் நலன்புரிச் சங்கச் செயலாளரும், ஆங்கில சுருக்கெழுத்தாளருமான திரு. எஸ். சிவச்சந்திரதேவன் இப்போட்டியை ஏற்பாடு செய்திருந்தார். இவருடன் நெல்லியடி அ. ம. ம. வித்தியாலய சுருக்கெழுத்து ஆசிரியை செல்வி தி. தேவராணியும் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர். நெல்லியடி ம. ம வித்தியாலயம், வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி, வல்வெட்டித்துறை மக்கள் வங்கி ஊழியர் நலன் புரிச்சங்கத்தின் (மாலி சந்தி) இலவச வகுப்பு மாணவிகள் இப்போட்டிகளில் கலந்து கொண்டனர். நெல்லியடி ம. ம. வித்தியாலய மாணவிகள் அதிகப்படியான ஒரு புள்ளியால் வெற்றியீட்டினர்.

போட்டிமுடிவில் எழுத்தாளர் திரு நெல்லை க. பேரன் பேசுகையில்; ''நான் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் தமிழ் தட்டெழுத்து சுருக்கெழுத்தைப் பயின்று பின்னர் தட்டெழுத்தாளராகவும் கடமையாற்றியுள்ளேன். மாணவர்கள் ஆங்கில சுருக்கெழுத்தில் காட்டும் ஆர்வத்துடன் தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்துக்கலையிலும் ஆர்வம் காட்ட வேண்டும். இன்றைய நிர்வாக அலுவல்களுக்குப் போதிய தமிழ்த்தட்டெழுத்தாளர்கள், சுருக்கெழுத்தாளர்கள் இல்லை என்று அடிக்கடி பத்திரிகைகளில் வாசிக்கிறோம். உண்மையும் அதுதான். இத்துறையில் மாணவர்களை உற்சாகப்படுத்த வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் ஏற்பாடு செய்துள்ள இந்தவினோதமான போட்டி இலங்கையில் இங்குதான் சுருக்கெழுத்துத் துறையில் முதன்முறையாக நடைபெறுகிறது'' என்றுர்.

தேவரையாளி இந்துக்கல்லூரி அதிபர் திரு. இரத்தினசபாபதி, திரு. சின்னராஜா ஆகியோரும்பேசினர். வெற்றியீட்டிய மாணவிகளுக்குப் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

# இரவு முழுவதும் காவல்

[வவனியா]

சுகயீனம் காரணமாக வவனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஒரு பௌத்த பிக்குவுக்கு இரவு முழுவதும் இராணுவத்தினர் காவலுக்கு நின்றனர். அடுத்த நாட்காலை குறித்த பிக்கு அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு அம்புலன்சில் அனுப்பப்பட்டார்.

# விவசாய டிப்ளோமா ஆசிரியர் பிரச்னை

[யாழ்ப்பாணம்]

வடபகுதியைச் சேர்ந்த விவசாய டிப்ளோமா ஆசிரியர்களுக்கு பயிற்சி நியமனக் கடிதங்கள் இன்னும் கிடைக்கவில்லை!

இது தொடர்பாக நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய விவசாய டிப்ளோமா ஆசிரியர்கள் கல்விச்சேவை ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளனர்.

கல்விச் சேவை ஆணைக்குழுவிற்கு நேற்று அனுப்பியுள்ள கடிதத்தில், நேர்முகப்பரீட்சை பெறும்பறுகள் இம்மாத இறுதிக்குள் கிடைக்குமென்று வானொலி மூலமும், பத்திரிகைகள் மூலமும் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து வடமாநில கல்விப் பணிப்பாளரிடம் சென்று கேட்டபோது, நியமனம் சம்பந்தமான கடிதம் அவருக்கு இன்னும் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டதாகவும், விவசாய ஆசிரிய நியமனக் கடிதங்களை அனுப்பி வைக்க ஆவன செய்யுமாறும் கேட்டுள்ளனர். [க]

# தர்மகுலசிங்கம் காலமானுர்

(மதுரை)

இலங்கைப் பத்திரிகையாளர் திரு. சி. தர்மகுலசிங்கம் [37 வயது] மாரடைப்பினுல் காலமானுர்.

'ஈழநாடு' பத்திரிகையின் மன்னுர் நிருபராக சுமார் பத்து ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றிய இவர்; மன்னுரில் ஏற்பட்ட அசம்பாவித சம்பவங்கள் காரணமாக அகதியாகக் குடும்பத்துடன் தமிழ்நாடு சென்று தர்மபுரம் எனுமிடத்திலுள்ள வாணியார் அணை எனும் சிற்றூரில் வாழ்ந்து வந்தார். மாரடைப்பினுல் அங்கு மரணமானுர்.

புலோலிதுறையாமூலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர்; தமிழகம் செல்லுமுன்னர் மன்னுர் பேசாலையில் தொழில்நிமித்தம் நீண்டகாலமாக இருந்தார்.

திரு. தர்மகுலசிங்கத்துக்கு மனைவியும் இரு குழந்தைகளும் உண்டு.

# அமெரிக்க ....

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

இதனையடுத்து புகைபிடிக்கும் பழக்கம் இல்லாத ஜூரர்கள் இந்த வழக்கில் அந்த கம்பனிக்கு சாதகமாகத் தமது தீர்ப்பை வழங்கினர். தொடர்ந்து இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

கால்பிறேட் 12 வயதினிலேயே புகைப்பிடிக்கத் தொடங்கியவராம். பின்னர் தினம் 60 சிகரெட்டுக்கள் என்ற கணக்கில் 50 வருடங்கள் இவர் இதே ரகத்தைப் பாவித்து வந்தாராம்.

இறுதியாக தமது 69 வது வயதில் ஈரல், சுவாசப்பை நோய் காரணமாக கடந்த சில மாதங்களுக்கமுன்னர் அவர் மரணமானுர்.

இதனைத் தொடர்ந்து இவரது குடும்பத்தினர் இவர் புகைத்த சிகரெட் கம்பனிமீது 1 கோடி டொலர்கள் நஷ்டஈடு கோரி வழக்குத்தாக்கல் செய்தனர். [கி]

# இன்றைய பலன்

(.0-ம் பக்கத் தொடர்ச்சி)

கன்னி:- வசதிகள் பெருகும் வாழ்க்கையும் வளமாகும் தொழில் துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும் இன்று சுபதினம்.

துலாம்:- அவசரப் போக்கு அனர்த்தங்களுக்கு இடமளிக்கும். எதிலும் அவதானம் வேண்டும் ஆயுத பீடைக்கும் இடமுண்டு.

விருச்சிகம்:- களஸ்திரவழியால் மகிழ்ச்சிகரமான சம்பவம் இடம்பெறும் காதலர் வாழ்வில் கனகுஷியான தினம் இன்று உற்சாகம் நிரம்பியதாக இருக்கும்.

தனுசு:- பிரச்னைகள் மேலும் சிக்கலாகும் உணவு விடயத்தில் பிரியக்குறைவு ஏற்படும்.

மகரம்:- புண்ணிய காரியங்களில் விருப்பு மேலிடும் பிதா வழி தனவரவிற்கு இடமுண்டு கடமையாற்றும் இடத்தில் ஒத்துழைப்புக் கிடைக்கும்.

கும்பம்:- முயற்சியால் முன்னேற்றம் உண்டு விவசாயிகள் வாழ்க்கையில் முன்னேற்றம் காணப்படும் தொழிலில் நன்மையுமுண்டு.

மீனம்:- சகோதர பாசம் தலைதூக்கி நிற்கும் பெரியோர்கள் ஆதரவும் பெருகும் மகிழ்ச்சிகரமான தினம்.

திருமலை
வே. ரவீந்திரன்


எமது அன்பான வாடிக்கையாளர்கள், நண்பர்கள் யாவர்க்கும் இதயம் கனிந்த

**நத்தார் வாழ்த்துக்கள்**

உரித்தாகுக.

**தரமான தங்க நகைகளை**

ஓடர் செய்து பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்:

**அன்ரன் லக்ஷா ஜுவல்லர்ஸ்,**

185/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(2612)



**விற்பனைக்கு**

எமது சங்கத்தில் வெற்றுச் சாக்குகளும், மாட்டுச் சாணகமும் (எருவும்) விற்பனைக்குண்டு. இவற்றுக்கான விலைகள் கேள்விப்பத்திர மூலம் கோரப்படுகின்றன. விண்ணப்ப முடிவுத் திகதி 10-01-86. விண்ணப்பப் படிவங்களை பெற்றுக் கொள்ள வேண்டிய முகவரி:

தலைவர்,
நல்லூர்த்தொகுதி அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய் (2611)



**INSTITUTE OF CHARTERED SECRETARIES AND ADMINISTRATORS (LONDON)**

PART I - Module I - 11 th Jan., 1986
Module II - 18 th Jan., 1986

**NORTH GEYLON TECHNICAL INSTITUTE**

14, St. Peters Lane, Hospital Road, Jaffna.

TELE: 24355



**விக்னு டியூசன் சென்றர்**

52, ஸ்ரான்லி வீதி, யாழ்நகர்.

10-வது வருட சேவை மீண்டும்

**O/L**

Day Classes
8-30 — 1-30
சனி, ஞாயிறு வகுப்பு
8-30 — 1-30
Evening Classes
2-15 — 4-30

5-ம், 6-ம், 7-ம், 8-ம், 9-ம் வகுப்புக்கள்

**ஆரம்பம்: 6-1-86**

குறிப்பு:

1. விசேட சித்தியுடன் பரீட்சையில் சித்திபெற எமது நிறுவனம் நிச்சயம் கைகொடுக்கும். கடந்த கால முடிவுகள் இதற்கு சான்ருகும்.
2. பலரின் வேண்டுகோளுக்கிணங்க இவ்வருடம் 5-ம் வகுப்பு ஆரம்பமாகின்றது.

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

## வந்தாறுமூலேயில் இருவர் பலி!

[மட்டக்களப்பு] வந்தாறுமூலேயிலுள்ள அம்பலததடிச் சந்தியில் நேற்றுக் காலே கார் ஒன்றில்வந்த ஐந்து நபர்களே நோக்கி இ. போ. ச. பஸ்ஸில் சென்ற அதிரடிப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இருவர் பலியானுர்கள். மூவர் தப்பி ஓடிவிட்டனர்.

கைவிடப்பட்ட கார் பின்னர் கிரான் முகாமுக்குக் கொண்டுசெல்லப்பட்டது, கைவிடப்பட்ட அந்தக்கார் வாழைச்சேனே தேசிய காகித கூட்டுத்தாபனத தலேவருக்குச் சொந்தமானதாகும். இந்தக் கார் கடந்த மாதம் கடத்தப்பட்டதாகும். [மா

---

# மரண அறிவித்தல்
## ந. தணிகாசலம்

வல்வெட்டித்துறை பிரபல வர்த்தகரும், ''கலாநிதி'' ஸ்ரோர்ஸ் உரிமையாளருமான திரு. நடராசா தணிகாசலம் 24-12-85செவ்வாய்க்கிழமைகாலமானுர். அன்னுரின் ஈமக்கிரியைகள் இன்று (25-12-85) புதன்கிழமை பி. ப. 3-00 மணியளவில் ஊறணி மயானத்தில் நடைபெறும். தயவுசெய்து இவ்வறிவித்தலே உற்ருர், உறவினர். நண்பர்கள் அனேவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேம்.

மனேவி, மக்கள், மருமக்கள்
''கலாநிதி'' ஸ்ரோர்ஸ்,
வல்வெட்டித்துறை.

[2631]

---

# மரண அறிவித்தல்
## திரு. வல்லிபுரம் இராசலிங்கம்

ஊர்காவற்றுறை சுருவிலேச் சேர்ந்த வல்லிபுரம் இராசலிங்கம் 23-12-85 அன்று கொழும்பில் காலமானுர். இவர் காலஞ்சென்ற திரு திருமதி வல்லிபுரம் அவர்களின் அன்புமகனும் காலஞ்சென்ற திரு. திருமதி சின்னப்பு [பிரபல வர்த்தகர், டெனியாய] அவர்களின் மருமகனும், புவனும்பாளின் அருமைக் கணவரும், வாசுகி [ஜேர்மனி] வாசுதேவன் [டோகா] ரேவதி, ஜானகி, வாமதேவன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருச்செல்வத்தின் அருமை மாமனுரும், வாசீசனின் [ஜேர்மனி] பேரனுமாவார், அன்னுரின் ஈமக்கிரியைகள் இன்று [25-12-85] புதன்கிழமை சுருவில் மயானத்தில் நடைபெறும். உறவினர், நண்பர்கள் அனேவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேம்.

தகவல்:
திருமதி இராசலிங்கம்,
சுருவில்.

[2629]

---

# மரண அறிவித்தல்
## இராமுப்பிள்ளே கந்தையா

புன்னுலேக்கட்டுவனேப் பிறப்பிடமாகக் கொண்டவரும், வயாவிளானே இருப்பிடமாகக் கொண்டவருமாகிய Dr. கந்தையா (Retired R. M. P., ஈஸ்வரி வைத்தியசாலே - காங்கேசன் துறை) 22-12-85 அன்று சிவபதமடைந்தார். அன்னுர் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சுதர்சனநாயகி (பொறியியலாளர் - சாம்பியா), ஆனந்தக்குமார் (பொறியியலாளர் - சிங்கப்பூர்), யோகநாயகி, விஜயகுமார் (அபுதாபி), ஈ யாளநாயகி (D. I. M. S), செந்தில்நாயகி (ஆசிரியை - பாலர் பாடசாலே) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், தங்கமுத்து (சப்போ), நல்லம்மா, சோமசுந்தரம் (சுங்கப் பரிசோதகர் - கட்டுநாயக்கா சுங்க இலாகா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கனகரத்தினம் (விரிவுரையாளர் - சாம்பியா), ஜராணி (சிங்கப்பூர்), சிவகுமார் (ஜெடா), சத்தியானந்தன் (பொறியியலாளர் -கிறீஸ்) ஆகியோரின் அன்பு மாமனுரும், நாகரத்தினம் (இளேப்பாறிய ஆசிரியர்), சிவஞானசுந்தரம்பிள்ளே (இளேப்பாறிய வங்கி முகாமையாளர் - இலங்கை வங்கி), கமலாம்பிகை (கோலாலம்பூர்), காலஞ்சென்ற குமாரசுவாமிப்பிள்ளே (முன்னுள் S. M.), சங்கரப்பிள்ளே, காலஞ்சென்ற நாகலிங்கம் (ஈப்போ), காசிப்பிள்ளே (மலேயன் பென்சனியர்), அன்னலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், லக்மீகரன், லம்போதரன், ஐங்கரன், லக்ஷ்மிலோஷினி, அபிராமி, அபர்ணு, ரஜந்தி, ஜமுனு, சோபிதா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னுரின் பூதவுடல், வியாழக்கிழமை (26-12-85) காலே 10-00 மணிக்கு அன்னுரின் இல்லத்திலிருந்து தகனக் கிரியைகளுக்காக குடும்ப மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். உற்ருர் உறவினர்களும், நண்பர்களும் இவ்வறிவித்தலே ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: இ.சிவஞானசுந்தரம்பிள்ளே,
வயாவிளான்.

[2626]

---

## கூட்டணி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கு அனுப்பி வைத்துள்ள இக் கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

''யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இலங்கை அரசையும் தமிழ் அமைப்புக்களேயும் பேச்சுவார்த்தைக்குமட்டும் கொண்டுவராமல், தமிழர் விடுதலேக் கூட்டணியினுல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆலோசனேகளின் அடிப்படையில் நிரந்தரமான அரசியல் தீர்வு ஒன்றுக்கு இட்டுச்செல்ல வேண்டும். இத்தீர்வுக்கு இலங்கை அரசை இணங்கச் செய்ய இந்தியா தனது முழுமையான செல்வாக்கையும் பயன்படுத்தவேண்டும்.

''தமிழர் விடுதலேக் கூட்டணி சமர்பித்துள்ள ஆலோசனேகள் இலங்கையின் ஒருமைப்பாட்டை பாதுகாப்பதுடன், இலங்கைத் தமிழர்கள் தம்மைத் தாமே பாதுகாத்துக்கொள்ள, நியாயமான அதிகாரத்தையும் வழங்கக் கூடியதாக உள்ளது. இனப் பிரச்னேயைத் தீர்ப்பதற்கு சமஷ்டிக் கொள்கை அடிப்படையில் அமைந்த அரசாங்கம் ஒன்றினே அமைப்பது சர்வதேச ரீதியான ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசமைப்பு உபாயமாகும். (ய)

---

## இந்திய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளர் கேட்டபோது;

''இலங்கையில் பெரும்பாலும் அப்பாவிகளான ஆண்களும், பெண்களும், குழந்தைகளுமாகத் தமிழ் மக்கள் கொல்லப்படுவது குறித்து நாள்தோறும் வரும்செய்திகள் தமிழ் நாட்டின் மக்களுக்கு மட்டுமன்றி இந்தியா முழுவதற்குமே கவலேயையும், அமைதியின்மையும் அளிக்கின்றன'' என்றுவருத்தப்தெரிவித்தார்.

''பயங்கரவாதிகளே ஒடுக்குவது என்பது ஒன்று. ஆனுல், ஏருகுறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக ஏராளமான மக்களே பலிவாங்குவது என்பது இன்னெறு'' என்ருர் இந்தியப் பிரதமர்.

''பெரிதும் அரசியல் தன்மை வாய்ந்த ஒருபிரச்னேக்கு இராணுவத்தீர்வு ஒருபோதும்வெற்றியடையாது என்று இந்தியா எப்போதுமே நம்பி வருகிறது. இந்த உறுதிப்பாட்டை இந்தியா உயர்மட்ட அளவில் இலங்கை அரசிடம் தெரிவித்துள்ளது'' என்றும் இந்தியப் பிரதமர் கூறினுர். (பி)

---

## ஆயுதபாணி..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

(22வயது) ஆகிய இருவரும் படுகாயமடைந்தவர்கள், இளேஞர்களான இவ்விருவரும் கைதுசெய்யப்பட்டுப் பின்னர் விடுதலே செய்யப்பட்டனராம்.

காரைநகர் துறைமுக வீதி வழியாக வந்த சிவிலுடையினர், குடங்களில் தண்ணீர் அள்ளிக்கொண்டுசென்ற பெண்களேத் தாக்கியதாகவும், கடைகளில் உணவுப்பொருட்கள் வாங்கிக்கொண்டிருந்த பெண்களே விரட்டியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட இரு கடைகளுக்குள்ளும் நுழைந்தவர்கள் அங்குள்ள பொருட்களேச் சேதப்படுத்தினர்.

பின்னர் எட்டுக்கட்டி வீதியால் அவர்கள் சென்று துப்பாக்கிவேட்டுகளேத் தீர்த்தனர். இதனுல் வீடுகளில் இருந்தவர்கள் பதற்றமடைந்து குழந்தைகளுடன் பாதுகாப்பான இடங்களேத் தேடிப் பதுங்கிக்கொண்டனர்.

சில மணி நேரத்தின்பின்னர் அவர்கள் அவ்விடத்தை விட்டுச்சென்றுவிட்டனர்,

இச்சம்பவம்பற்றி கடற்படை முகாம் பொறுப்பதிகாரிக்கும் முறையிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

---

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B10036/81. Eelanadu P. O. Box: 49, Telegram, Eelanadu, Telephone: 22389-24126.

---

# விவசாய டிப்ளோமா ஆசிரியர்களாக தெரிவானேர்

[யாழ்ப்பாணம்] விவசாய டிப்ளோமா ஆசிரியர்களாக நியமனம்பெற்றுள்ளவர்களின் பெயர் விபரம் வெளியாகியுள்ளது. இவர்களது சேவை முன் பயிற்சிக்கான அழைப்புக் கடிதத்தை 27ந் திகதி காலே (வெள்ளிக்கிழமை) கல்விச் சேவை அலுவலகத்திலிருந்து கடிதத்தைப் பெற்றுக்கொண்டு அவர்களுடைய பயிற்சிக் கலாசாலேக்குச் செல்லலாம் என்று கல்விச் சேவை ஆணேக்குழு உறுப்பினர் கலாநிதி ஆ. கந்தையா தெரிவித்துள்ளார். பெயர் விபரம் வருமாறு:-

ஏ. அருள்பாஸ்கரன் - ஆலங்கேணி, எம். ஐ. மொகமட் அசார்-காரைதீவு, எம் ஏ.அபுசாலி-அக்கரைப்பற்று, ஏ.அப்துல் மஜீத் - சம்மாந்துறை, பி. சண்முகநாதன்-மாத்தளே. ஏ. எல். முபாரக் - அக்கரைப்பற்று, ஜி. சிறிரஞ்சன் - வவனியா, எஸ்.சிவராஜா-மானிப்பாய், ஜே. சத்தியேந்திரன்-உடுப்பிட்டி, எஸ். வேலுப்பிள்ளே-உருத்திரபுரம், திருமதி பி.கந்தையா - யாழ்ப்பாணம், எஸ். சத்தியபாலன் - மல்லாகம், எஸ். சிவகுமார் - நயினுதீவு, செல்வி எஸ். சிறிகந்தகௌரி - நையினுதீவு, எஸ். கிருபானந்தன் - கோப்பாய், கே. வசீகரன் - இளவாலே, கே. கணேசலிங்கம் - கிளிநொச்சி, செல்வி எம். மேனகா-உரும்பிராய், ஏ. எஸ். பாலகிருஷ்னன் - சுழிபுரம், ரி. மதிவதனன் - வசாவிளான், கே. குணசீலன் சாவகச்சேரி.

---

# மரண அறிவித்தல்
## திரு. நவரத்தினம் மயில்வாகனம்

வண்ணுர்பண்ணே ஐயனுர் கோவிலடியைச் சேர்ந்தவரும், யாழ்ப்பாணம் மாநகரசபையில் முன்னுளில் கடமையாற்றியவரும், தற்பொழுது பென்சனியருமாகிய நவரத்தினம் மயில்வாகனம் 23 - 12 - 85 திங்கட்கிழமை காலே காலமானுர். அன்னுர் வாலம்பிகையின் அன்புக்கணவரும், சத்தியவதியின் (India), அன்புத்தந்தையரும், உடுவிலேச்சேர்ந்த செல்வசந்திரனின் (Germany) அன்பு மாமனுரும், திருமதி மாணிக்கரத்தினம் வைத்திலிங்கத்தின் (India) அன்புச்சகோதரனும். கவிச்செல்வன் (Germany), தர்மினி (India)யின்அன்புப் பேரனுமாவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில்நடைபெற்று கோம்பையன்மணல் மயானத்தில் அன்று தகனம் செய்யப்பட்டது. உற்ருர், உறவினர், நண்பர்கள் இத்தகவலே ஏற்றுக்கொள்ளவும்.

[2617]

---

# மரண அறிவித்தல்
## R. A. அருட்பிரகாசம்

றெபேட் அருட்பிரகாசம் காலமானுர். இவர் காலஞ்சென்ற ஜோன் அருட்பிரகாசம், ஞானம்மாவின் மூத்த மகனும், கிறேஸ் [ரஞ்சி]யின் அன்புக்கணவரும், றெபினி, றதனி, றக்ஷினி, றங்காவின் அன்புத் தந்தையும், குணரத்தினம், ஹென்றி, ஜோஜ்,சாம் [U. K.] ராணி, கிறிஷ்மி ஆகியோரின் அன்புச் சகோதரரும், டட்லி ராமலிங்கத்தின் அன்பு மாமனுரும், ரேஷினியின் பாட்டனுரும், தவரட்ணசிங்கம், செல்வமணி சிவயோகம், புவிநேசம், பபி, இந்திரா, ஞானநேசன், துரைரத்தினம் ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னுரின் பூதவுடல் நாளே வியாழக்கிழமை [26-12-85] மாலே 2-30 மணிக்கு இல்லத்திலிருந்து மானிப்பாய் சேமக்காலேக்கு எடுத்துச் செல்லப்படும்.

'றெபினி வாசா'
சுதுமலே வடக்கு,
மானிப்பாய்.

தகவல்:
K. R. துரைரத்தினம்.

[2628]

---

# மரண அறிவித்தல்
## திரு. கந்தையா பத்மநாதன்
(இலிகிதர், பெருந்தெருக்கள் திணேக்களம், யாழ்ப்பாணம்)

கலட்டியைச் சேர்ந்த திரு. க. பத்மநாதன் 24-12-85 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற திருமதி மிருழாலினிதேவி பத்மநாதன் அவர்களின் அன்புக் கணவரும்; செல்வி ஜெயதாரணியின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற திரு. கந்தையா - திருமதி பாக்கியம் கந்தையா அவர்களின் அருமை மகனும்; திரு. பரமநாதன், திரு. இராசநாயகம் அவர்களின் சகோதரரும்; திரு.ப சி.அ. பொன்னுத்துரை - திருமதி கனகம்மா பொன்னுத்துரை அவர்களின் மருமகனும் ஆவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் 45, கலட்டி அம்மன் வீதி (கலட்டி), யாழ்ப்பாணத்தில் அமைந்திருக்கும் அன்னுரின் இல்லத்தில் 25-12-85 இன்று] புதன்கிழமை மாலே 3 மணியளவில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலே உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்: ப. சி. அ. பொன்னுத்துரை
(மாமன்)

[2630]